426

426
2.5

REGISTERED No. M. 6165. ந. பை. 13

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

**மே—1958.**

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 APR 1958
MADRAS


| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| சர்வ அதிகாரமும் அல்லாஹ்வுக்கே | 1 |
| கலமான மார்க்கம் (கும்மிடி பூண்டி. பி. டி. ஷாஹுல் ஹமீத்) கண்ணென்ன கண்ணே? (வேலை - கவிஞர் சாந்திதாசன், சென்னை) | 6 |
| ஓர் ஆங்கில நவ் முஸ்லிமின் ஆவல்! (மஆலி ஸாஹிபு-பாகவி) | 7 |
| முஸ்லிம் மன்னரின் ஹிந்து ராணிகள் (டி. எப். ஆர். மஆலி ஸாஹிபு-பாகவி) | 13 |
| தென்னிந்திய முஸ்லீம் கல்விச் சங்கம் போட்டிகள் | 18 |
| மாநிலம் மறக்க முடியாத மாவீரர் | 21 |
| திருக் குர்ஆன் சார சங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) | 24 |
| சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது ...லக்கிய தூயவர் | 27 |


...இஸ்லாம் ஆபீஸ்:
...ட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு
வருஷ சந்தா ரூ. 1–50
தனிப் பிரதி நயா பைஸா 0–13
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–00

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.


# நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்

(முதல் பதிப்பு)

இதில் நமது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவதரித்தது முதல் வபாத்து வரை சுருக்கமாக விபரித்து எழுதப்பட்டுள்ளது. இத்துடன் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உம்மத்துமார்களுக்கு மொழிந்தருளிய உபதேசங்களும் குவலயத்தோர்க்கு குர்ஆன் ஷரீப் கூறும் செய்திகளுள் சிலதும் சேர்க்கப் பட்டுள்ளன. 115 பக்கங்கள் கொண்டது.

விலை ரூ. 1–00

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

الإسلام

# பத்ஹுல் இஸ்லாம்

மே—1958.

## சர்வ அதிகாரமும் அல்லாஹ்வுக்கே!

"அனில் ஹுக்மு இல்லா லில்லாஹி"

இப்பிரபஞ்சத்தில், மானிடப் பிறவிகளாகிய மக்களெல்லோரும், நூற்றுக்கணக்கான சக்திகளுக்கு அடிமைப் பட்டிருக்கிறார்கள். யாருக்கும் அடங்கி நடக்காமல், யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

'ஆண்டான்' என்றும் 'அடிமை' என்றும் இரு பிரிவினர் ஆரம்ப காலத்தில் ஏற்பட்டனர். அடிமை என்பான் ஆண்டான் என்பானுக்கு, எல்லா விஷயத்திலும் அடங்கி ஒடுங்கி குற்றேவல் புரிபவனாக இருந்து வந்தான்.

பண்டைக் காலத்தில்; ஆண்டானுக்கு அரசன் என்றும், அடிமைக்கு பிரஜை என்றும் பெயர் உண்டாயிற்று. ஆனால் அரசன், பிரஜையை விட மிக மிக உயர்ந்தவனாகவே பாவிக்கப்பட்டு வந்தான். அரசனுக்கு எல்லா விதமான அதிகாரமும் இருந்து வந்தது.

பிரஜையாகிய அடியவனைக் கொன்று போட, அரசனாகிய ஆண்டானுக்கு அதிகாரமும் உரிமையும் இருந்து வந்தன; அரசனை எதிர்த்துப் பேசவும் அடியவனுக்கு உரிமை கிடையாது.

இது மட்டு மல்ல; மிகப் புராதன காலத்தில், அரசனை மூட மக்களெல்லோரும் தெய்வமாக எண்ணி வணங்கி வழி பட்டு வந்தார்கள். அரசனை தெய்வ அவதாரமாகவே கருதி வந்தனர். அரசனுக்கு அஞ்சலி செய்து, பூசை புனஸ்காரமும் புரிந்து வந்தனர்.

அரசனை வழி படுவதை, சில வகுப்பார் மதக் கடமையாகவும் கட்டுப் பாடாகவும் பாவித்து வந்தனர். இதை யொட்டி, ஜாதிகளும் வகுக்கப் பட்டிருந்தன. க்ஷத்திரியன், பிராம்மணன், வைசியன், சூத்திரன் என்ற பெயரில் அந்நான்கு வர்ணத்தாரும் விளங்கி வந்தனர். ஒரு வகையில் க்ஷத்திரியனாகிய அரசன் கூட, வைதிகனாகிய பிராம்மணனுக்கு அடிமைப் பட்டிருந்தான். பொதுப் படையாகிய எல்லோரும் க்ஷத்திரிய ஜாதியாகிய அரசனுக்கு அடிமைப் பட்டுக் கிடந்தார்கள்.

இவ்வகையில் நான்கு ஜாதியாரில் ஒரு திரத்தான், நாட்டையும் நாட்டு மக்களையும் ஆட்சி புரிந்து அடக்கி ஒடுக்குபவனாக இருந்து வந்தான்; இன்னொரு திரத்தான், வேத மந்திரங்களை ஓதி, மற்ற மூன்று திரத்தாரையும் சுரண்டி அண்டிப் பிழைத்து அதிகாரம் செலுத்தி வந்தான். மூன்றாம் திரத்தான், வியாபாரமும் புரிந்து பொருளீட்டி, தனக்கு மேற்பட்ட அரசனுக்கும் பார்ப்பனனுக்கும் காணிக்கையும் தண்டமும் செலுத்துபவனாக கடனாற்றி வந்தான். கடைசியான வர்க்கத்தைச் சேர்ந்த சூத்திரன் என்னும் எளியோன், நிலத்தை உழுதுப் பாடு பட்டுழைத்தும் குற்றேவல் புரிந்தும், மற்ற மூன்று உயர் ஜாதியாருக்கும் பணி விடை புரிந்து அனுகூலம் செய்து வந்தான்.

இத்துறையில் நாட்டுக் குரியவன் அரசனாகவும், ஞானத்துக்கு உரியவன் பிராம்மணனாகவும், பொருளுக்கு உரியவன் வைசியனாகவும், உழைப்புக்கு உரியவன் சூத்திரனாகவும் கருதப் பட்டு வந்தான். இவ்வாறாக உலக சம்பிரதாயம் வெகு காலம் நடை பெற்று வந்தது.

மனிதருக்குள் ஒருவர் உயர்ந்தவர்—மற்றவர் தாழ்ந்தவர் என்ற சம்பிரதாயம், பின்னைய காலங்களில் சிலரால் ஆக்ஷேபிக்கப் பட்டும் எதிர்க்கப் பட்டும் வந்தது. இங்ஙனம் எதிர்ப்போரை, அக்காலத்தோர், 'புரட்சிக்காரன்' என்றும், துரோகி என்றும் சொல்லிப் பிடித்துச் சிறையிட்டு அடக்கி ஒடுக்கி எதேச்சாதிகாரம் புரிந்து வந்தனர்.

18074

இத்தகைய ஏற்றத் தாழ்வையும் எதிர்ப்புக்களையும் குழப்பங்களையும் ஒழித்து, எல்லோருக்கும் இடை ஒற்றுமை ஏற்படுத்தி, சமத்துவ முண்டாக்கி, சமூகமாக வாழ்வதற்கு, கி. பி. 6–ம் நூற்றாண்டில், அரபியா தேசத்தில் பரிசுத்த தீனுல் இஸ்லாம் என்னும் 'புதுக் கொள்கை' தோன்றியது.

இந்த இஸ்லாத்தின் கொள்கைப் படி, மனிதராகப் பிறந்தோர் எல்லோரும் சரி சமம்; யாரும் யாருக்கும் தாழ்ந்தவரில்லை; எவரை விட எவரும் உயர்ந்தவரில்லை; பிறப்பால் ஒருவன் உயர்ந்தவனுக மாட்டான்; அதிகாரத்தால் எவனும் உயர்ந்து விட மாட்டான்; அறிவினால் மட்டும் ஒருவன் உன்னதமடைந்து விடமாட்டான்; தொழிலால் ஒருவன் தாழ்ந்து விட மாட்டான். மனிதராய்ப் பிறந்த விஷயத்தில் எல்லோரும் சமம்தான். ஆனால் எவர், பக்தி ஒழுக்கத்தினாலும், ஏக தெய்வத் தியானத்தாலும், நற்குண நற்சுபாவத்தாலும் மேன்மையுற்று விளங்குகிறாரோ, அவரே சிறந்தவர்—சீரியர்—நல்லவர்—உத்தமர் என்று பாராட்டப் படுவார்.

"இன்ன அக்ரமக்கும் இன்தல்லாஹி அத்காக்கும் (நிச்சயமாய், உங்களில் யார் பக்தி ஒழுக்கத்தால் சிறந்திருக்கிறாரோ அவரே சிறந்தவராவர்"). இது திருக்குர்ஆன் வாக்கியக் கருத்து.

இந்த ஒரே வாக்கியத்தைக் கொண்டே, உலகில் தலைவிரித்தாடிக் கொண்டிருந்த ஜாதி வித்தியாசத்தை, எமது இஸ்லாம் மதம் இல்லாதொழித்து விட்டது. இஸ்லாத்தில்—முஸ்லிம்களுடைய வாழ்வில், ஆளும் ஜாதி, போதிக்கும் ஜாதி, பணக்கார ஜாதி, உழைக்கும் ஜாதி என்று வித்தியாசம் கிடையாது.

மேலும், இஸ்லாமிய சம்பிரதாயத்தில் ஆளுவோன், ஆளப்படுவோன் என்ற உயர்வு—தாழ்வும் அனுமதிக்கப்படுவதில்லை. ராஜன் என்பதால் ஒரு முஸ்லிம் உயர்ந்தவனாய் விட மாட்டான்; கூலி வேலை செய்யும் பாட்டாளியாதலால் ஒருவன் தாழ்ந்தவனாய் விட மாட்டான். முஸ்லிம் என்றால் எல்லோரும் சரி சமத்துவமுள்ள சகோதரர்களாவர்.

முஸ்லிம்களுடைய சமத்துவ—சகோதரத்துவத்தை, அல்லாஹ்வுடைய திரு இல்லமாகிய புனித மஸ்ஜிதுகளில் காணலாம். தினமும் ஐந்து நேரமும் தொழுகைக்காக பாங்கு சொல்லப் பட்டதும், எல்

லோரும் வந்து கூடி, கை, முகம், கால் சுத்தம் செய்து கொண்டு, அணி அணியாக 'ஸப்பு' கட்டி நின்று தொழுதுக் கொள்ளும் காட்சி உலகத்தில் எங்கும்—எந்த ஆலயத்திலும்—எந்த க்ஷேத்திரத்திலும் காணக் கிடைக்காத காட்சி யாகும். தொழுகைக்கு பாங்கு—இகாமத்து சொல்லி யானதும், அரசன் என்ருே—சேவகன் என்ருே, பணக்காரன் என்ருே—ஏழை என்ருே, வெள்ளையன் என்ருே—கறுப்பன் என்ருே—நெட்டையன் என்ருே—குட்டையன் என்ருே, அழகன் என்ருே—அரூபி என்ருே எவ்வித வித்தியாசமுமின்றி, ஒருவன் தோளுடன் இன்னொருவனின் தோள்புறம் உரசிய ஒட்டி நின்று, ஜமாஅத்துடன் தொழுதுக் கொள்ளும் காட்சி, மகாச் சிறந்ததாகும்.

"கிப்லா ரூ ஹோக்கே கடே ஹோகயமே மஹ்மூதோ—அயாஸ்—நா கொயி பந்தா ரஹா, அவர் நா கொயி பந்தா நவாஸ்" என்று, இஸ்லாமிய கீழ் நாட்டு மகா கவி மர்ஹூம் ஸர். முஹம்மத் இக்பால் (ரஹ்) எடுத்துரைக்கிருர்.

"பள்ளி வாசலில் தொழுகைக்கு பாங்கு சொல்லப் பட்டதும், எல்லோரும் வந்து கூடி கிப்லாத் திசையை நோக்கி நின்று கொண்டனர். அப்போது தொழுகையாளிகளில் தேசாதிபதியாகிய மன்னன் மஹ்மூதும், அவரது அடிமைச் சேவகனுகிய அயாஸும் சரி சமத்துவமாய் நின்று விட்டனர்; எனவே ஆதரிக்கும் ஆளுவோன் என்பானும் இல்லை. ஆளப்படும் அடிமை என்பானும் இல்லை; எல்லோரும் ஏக சமூகமாயினர்" என்பது அக்கவியின் கருத்து.

இக்காலை உலகம், எவ்வளவோ முன்னேறிச் சென்று விட்டது; விஞ்ஞான ஆராய்ச்சி விஷயத்திலும் சரி, அரசாட்சி புரியும் விஷயத்திலும் சரி, மனித சமூகம் மிகமிக முன்னேற்ற மடைந்து விட்டது. ஆனல் ஆளும் வர்க்கம் என்றும், ஆளப்படும் வர்க்கம் என்றும் நவீன நாகரிக உலகம் பிரிவினைப்பட்டு போராட்டம் புரிந்து கொண்டு காட்சியளிக்கிறது.

விஞ்ஞானத்திலும் விவேகத்திலும் மனித சமூகம் இவ்வளவு முன்னேற்ற மடைந்துப் போயுங் கூட, ஆளும் வர்க்கம் என்றும் ஆளப்படும் வர்க்கம் என்றும் விபரீதமான வித்தியாசம் இருப்பதன் நோக்கம் மகா விகசிதமாகவே இருந்து வருகிறது.

ஒரு நாட்டிலே சர்வாதிகாரம் தலைவிரித்தாடுகிறது: மற்றொரு நாட்டிலே பணத்தின் சக்தி தலைவிரித்துத் தாண்டவமாடுகிறது. ஓர் நாட்டிலே ஜனநாயகத்தின் பெயரால் மக்கள் சார்பாக ஒரு நபரு சர்வாதிகாரம் செலுத்துகின்ருர். மற்ரொரு நாட்டிலே, பணசக்தியைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று 'பிரஸிடென்ட்' பெயரால் சர்வாதிகாரம் செலுத்துகின்ருர். இவ்வாறே ராஷ்டிரபதி என்ற

பெயராலும், பிரதம மந்திரி என்ற பெயராலும், ஒரு வகை சர்வாதிகாரம் எங்கும் நடைபெற்றுக் கொண்டுதா னிருக்கிறது.

இத்தகைய சர்வாதிகார ஆட்சிமுறை நடைபெறும் நாடுகளில் — சமூகங்களில் — தேசங்களில் பொதுவாக ஜனங்களின் கூக்குரல்—அபயக் கூச்சல் — புரட்சித்தொனி அதிகமதிகம் கேட்டுக் கொண்டிருக்கிறது. இது வாழ்வில் அமைதியின்மையையும், ஆட்சி முறையில் சுபிக்ஷ மின்மையையும் எடுத்துக் காட்டுகிறது.

சர்வாதிகாரம் என்றால் பலவகை யுண்டு. அன்று ஜெர்மனி நாட்டிலே, துப்பாக்கி முனையில் மக்களை மிரட்டி ஆண்டுகொண்டிருந்து அட்டகாசம் புரிந்து அக்கிரமங்கள் இழைத்துப் பல்லாயிரம் உயிர்களைப்போக்கி அழிந்து ஒழிந்து மாய்ந்துப் போனானே அடால்ப் ஹிட்லர் அவன் கையாண்டு வந்ததும் சர்வாதிகாரம் தான்.

நமது இலக்ஷியம் யாதெனில்: பொதுவாக மனித வர்க்கத்தினிடையே, ஆத்மார்த்தம் சம்பந்தமான ரீதியில், எவருக்கும் எவ்விதமான சர்வ அதிகாரமும் கூடாது என்பது தான். அதாவது சன்மார்க்க விஷயத்தில் யாரும் தலையிடக்கூடாது; யாரும் பலாத்காரம் புரியக்கூடாது; சகல ஜனங்களுக்கும் தத்தம் சன்மார்க்க வைதிக சம்பிரதாயப்படி நடந்து கொள்ள, சர்வ சுதந்தரமும் வேண்டும் என்பதுதான்.

இம்முறையில், "அனில் ஹுக்மு இல்லா லில்லாஹ்" (நிச்சயமாக அதிகார மெல்லாம் அல்லாஹு தஆலாவைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது") என்ற திருவேத வாக்கியம் கவனித்தற்குரியதாகும். உண்மையில், உலகத்தை ஆளுபவர்களான டிக்டேட்டர்கள் சர்வாதிகாரிகளல்லர்; இன்னோர் வாஸ்தவத்தில் 'ஹாக்கிம்' களல்லர்; இன்னோர் வசம் இருப்பது மெய்யான ஹுக்கூமத் அல்ல.

உண்மையான 'ஹக்கிம்', எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா ஒருவனே யாவன். அவனிடமே எல்லாவிதமான சக்தியும் அதிகாரமும் உண்டு. அவனன்றி ஓர் அணுவும் அசைவதில்லை. மனிதர் மீது மனிதர் அதிகாரம் செலுத்த உரிமை கிடையாது. மனிதர் முதல் எண்பத்தினாலாயிரம் ஜீவராசிகள் மீது அதிகாரம் செலுத்தும் 'குத்ரத்' அல்லாஹு தஆலா ஒருவனுக்கே உரியதாகும்.

அவனே ரப்பு; அவனே மாலிக்; அவனே ஹக்கிம்; அவனே ரஹ்மான்; அவனே ரஹீம். நாமெல்லோரும் அவனது அடியார்கள்; அவனுக்கு மட்டுமே தாழ்ப்பணிந்து வணக்கம் செலுத்த வேண்டியவர்கள். அவனையே வணங்குவோம்; அவனிடமே உதவி கோருவோம்.

# நலமான மார்க்கம்

## கும்மிடி பூண்டி. பி. டி. ஷாஹுல் ஹமீத்

சினிமா படம்: நான் பெற்ற செல்வம். இசை: நான் பெற்ற செல்வம்

(தொகையரு)

நாம் கண்ட மார்க்கம் நலமான மார்க்கம்
தீனுல் இஸ்லா மெனும் தெய்வீக மார்க்கம்...

(பாட்டு)

நாம் கண்ட மார்க்கம்—நலமான மார்க்கம்
தீனுல் இஸ்லா மெனும்—தெய்வீக மார்க்கம் (நாம்)
கண்டால் ஈற்கும் எழில் காந்தம்
கருத்தால் கவரும் சன்மார்க்கம்
எங்கும் சிறந்தே விண்பாலும்
இலங்கும், துலங்கும், நன் மார்க்கம்...நாம்... (நாம்)
மாண்பே குறையா மா நபி யார்
மறையை அளித்தாய் மா னிடற்கே
உன் பேர் மறைபா பாரினிலே
ஆளும் மிறை, போதமிதே, இஸ்லாமே...நன்றே... (நாம்)

—⋯—

# கண்ணென்ன கண்ணோ?

கவிதை

[வேளே—கவிஞர் சாந்தி தாசன், சென்னை]

இறையும், மறையும் இயம்புக நிறைவாய்
இகத்திடை இஸ்லாம் பரத்திய எங்கோன்
முறைதனைக் கார்த்த முஹம்மது நபி திரு
முழக்கங்கள் ஏற்காத செவி என்ன செவியோ?
செயல் நயம் கூட்டி, சிறந்த வழிக்காட்டி
சுடர்வின்றி மாந்தர் உய்த்திடத் தூண்டி
இயல்புறும் பாந்தம தோய் இன்முக நபி திரு
இத வழிக் காணுத கண்ணென்ன கண்ணோ?
நோக்கும் திசை எல்லாம் நல்ல தொரு
நிலையானக் கொள்கையுடன் வளர்ச்சியுற
ஆக்கமது குன்றுது அழைத்த திரு
அம்போதம் அணுகாத நெஞ் சென்ன நெஞ்சோ?
கற்றோரை காமுறவும், மற்றும் தம்மின்
குடியிருப்பை மிதித்த வரை நேசிக்கவும்
உற்ற பெரும் துணைவி யோடு உவக்கத் திரு
உணர்த்திய நெறி நடக்கா காலென்னகாலோ?

# ஓர் ஆங்கில நவ் முஸ்லிமின் ஆவல்!

மஆலி ஸாஹிப் (பாகவி)

பம்பாயில் நிகழ்ந்த சம்பவமொன்று, நம் முஸ்லிம்களுக்கு நல்ல படிப்பினை தரக் கூடியதா யிருக்கிறது. நம் நாட்டு முஸ்லிம்களில் பெரும்பாலோர், மதாசாரப் பற்று இல்லாதவர்களாகவும், உண்பதும் சுகிப்பதும் உறங்குவதுமே வாழ்க்கை லக்ஷியமாகவும் கருதி யுழல்கின்றனர். ஆனால் புதிதாக நூல் இஸ்லாமைத் தழுவும் நவ் முஸ்லிம்களோ, இஸ்லாமிய சம்பிரதாயத்திலும் முஸ்லிம்களின் நற்குணபழக்கவழக்கத்திலும்அபார பிரியமுடையவர்களாகவும் விளங்குகின்றனர். இதை விளக்குவதற்கு, கீழ் காணும் விஷயத்தை 'ஆஜாத் நவ்ஜவான்' என்ற உர்தூ பத்திரிகையிலிருந்து எடுத்து ஈங்கு தருகிறோம். —மஆலி சாஹிப் (பாகவி)

## ஓர் ஐரோப்பியர் விஜயம்

பம்பாய் தாருத் தப்லீக் என்னும் பிரசார நிலையம். 27—3—58—ந் தேதி யன்று பகல் மூன்று மணி இருக்கும். காரியாலயத்தில் வேலை நடந்து கொண்டிருக்கிறது. அப்போது 'காலிங் பெல்' மணி யோசை கேட்கிறது. "எஸ்! உள்ளே வரலாம்" என்று அனுமதி யளிக்கப் பட்டது. அப்போது, நல்ல தோற்றமுள்ள ஓர் ஆங்கில இளைஞர் உள்ளே வந்தார். முகத்தில் தூய்மை ஜொலித்துக் கொண்டிருந்தது. உதடுகளில் புன் முறுவல் தவழ்ந்து கொண்டிருந்தது.

உள்ளே வந்த அந்த ஐரோப்பியர், "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று கூறினர். ஓர் ஆங்கிலேயர் இஸ்லாமிய முறைப்படி சலாம் கூறியது எங்களுக்கு அளவிலா ஆனந்தத்தையும், ஆச்சரியத்தையும் உண்டு பண்ணியது.

நாங்கள் "வஅலைக்குமுஸ்ஸலாம்; வரஹ்மத்துல்லாஹி வபரக் காத்துஹு" என்று ஸலாமுக்கு ஜவாபு சொல்லி விட்டு, வந்த மனிதரை உட்காரச் சொன்னோம்.

வந்தவர், அமைதியாக உட்கார்ந்து எங்களை நோக்கி "உங்களில், மஸ்ஜிதுடைய பேஷ் இமாம் யார்?" என்று வினவினர். என்னுடனிருந்தவர்கள், என் பக்கம் கை நீட்டி "இவர் தான்" என்று சொன்னார்கள். உடனே அந்த ஐரோப்பியர், என்னருகில் வந்து, மிக மிக மரியாதையாகவும், பிரியமாகவும் 'முலாகாத்' செய்து என்னை கட்டித் தழுவி 'முஆனக்கா'வும் புரிந்து, அளவிலா ஆனந்தமடைந்தார்.

"தாங்கள் யார் என்று நாங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்" என்று எங்களில் ஒருவர் கோரிக் கொண்டார்.

அதற்கு அந்த ஐரோப்பிய ஆங்கில நண்பர் சொன்ன வரலாருவது:—

"என்னுடைய பழைய—அசல் பெயர் லேனொர்டு ஆலன் (Leonerd Alan) என்று இருந்தது. இப்போது என்னுடைய இஸ்லாமியப் பெயர் "லத்திபுர் ரஹ்மான்" என்பதாகும். நான் 1955–ம் ஆண்டில், லண்டன் முஸ்லிம் மிஷன் ஸ்தாபனத்தில், மனப்பூர்வமாக தீனுல் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு முஸ்லி மானேன்."

இதைக் கேட்டதும் நாங்கள் "அல்ஹம்து லில்லாஹ்! மர்ஹபன், அஹ்லன், வஸஹ்லா" என்று ஆண்டவனைப் புகழ்ந்து அவரை வாழ்த்தினோம். மேலும் அவர் தொடர்ந்து கூறலானார்:—

"நான் முஸ்லிமாவதற்கு பல்லாண்டு முன்னதாக, இஸ்லாத்தைப் பற்றி தெரிந்து, ஆராய்ந்து வந்தேன். இஸ்லாமிய தத்துவார்த்த நூல்களை ஆங்கிலத்தில் படித்து வந்தேன். அப்போது என் மனதில் இஸ்லாத்திற்கு ஒரு மதிப்பு ஏற்பட்டது. இஸ்லாமிய ஒளி என்னுடைய ஹிருதயத்தில் இடம் பெற்றுக் கொண்டது. எனவே, நான், மனப்பூர்வமாக லண்டன் மஸ்ஜிதுக்குள் போய், பெரிய ஹஜ்ரத்திடம் கலிமா சொல்லிக் கொடுக்கப்பட்டு, இஸ்லாத்தை ஏற்று முஸ்லிமாய் விட்டேன்."

"தங்களுடைய சொந்த ஊர் வரலாறு என்ன?" என்று நாங்கள் கேட்டோம். அதற்கவர் மேலும் கூறியதாவது:

"நான் இங்கிலாந்தைச் சேர்ந்த இங்கிலிஷ் மேன். நியூ ஹவென் (New Hevan) என்ற ஊரைச் சேர்ந்தவன். என்னுடைய தகப்பனார், சட்டிடங்களை கட்டித் தரும் இன்ஜினியர் தொழில் புரிந்து வந்தவர்; கட்டிட காண்ட்ராக்டர். நாங்கள் நல்ல உயர்க்குடும்பத்தைச் சேர்ந்தவர்களே.......நான் துணிச்சலாக எங்கள் கிறிஸ்துவ மதத்தைவிட்டு, பகிரங்கமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதால், என் தகப்பனார் கொஞ்சம் அதிருப்தியே அடைந்தார். நான் என்னசெய்யட்டும்; தந்தையின் அதிருப்திக்காக சத்திய சன்மார்க்கம் என்று நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட இஸ்லாத்தை கைவிட்டுவிட இணங்கவில்லை. இஸ்லாத்திலேயே ஸ்திரமாக இருந்து கொண்டேன். இதற்காக நான் பெற்றோர் உறவையும், ஊரார் பந்தத்தையும், நாட்டுப் பண்பையும் இழக்கத்தயாராகவே இருக்கிறேன். இப்படி நான் துணிந்து செய்த தியாகத்தின் காரணமாகவே, இன்று நான் உங்கள் திருச்சமுகத்தில் வீற்று, சமத்துவமாய் சம்பாஷிக்கும் பாக்கியம் பெற்றேன்."

"சரி தாங்கள், இங்கிலாந்தை விட்டு இவ்வளவு தூரம், இந்தியாவுக்கு (பம்பாய்க்கு) வந்த காரணம் என்ன?" என்று பிரியமாக வினவினோம். அதற்கவர் கூறியது:—

"நான் ஓர் எண்ணெய்க் கப்பலில் உத்தியோகம் செய்பவன்; ஒரு கப்பல் பாரசீக வளைகுடா (கடலி) லிருந்து, மண் எண்ணெய் ஏற்றிக் கொண்டு இப்போது பம்பாய் வந்திருக்கிறது. அதில் நான் ரேடியோ ஆபீஸர். எங்கள் கப்பல் இந்நகர் வந்து இரண்டொரு நாளாயிற்று. மீண்டும் நாளை புறப்பட்டுப்போய்விடும். என்னுடைய சகதொழிலாளர்கள் எல்லோரும், பெரிய ஹோட்டல்களில் தங்கியிருக்கிறார்கள். அவர்கள் சகல சௌகர்யத்தோடு உல்லாசமாய் பொழுதை போக்குவார்கள். எல்லாவித கேளிக்கை விளையாட்டுகளிலும் ஈடுபடுவார்கள். ஆனால், நான் கேளிக்கைகளில் இஷ்டம் குறைவானவன். எனவே, அவர்களை விட்டுப் பிரிந்து, இன்றிரவை (புனித ரமலான் மாதத்து நோன்பு இரவை) இவ்விடம் உங்களோடு இருந்து கழிக்கவும், மஸ்ஜிதில் ஒவ்வொரு ஜமாஅத்து தொழுகையிலும் கலந்துகொண்டு நலன்பெறவும் விரும்புகிறேன்."

"மிகவும் சந்தோஷமாக எங்களோடு இருக்கலாம். எங்களாலான சௌகர்யம் செய்து தருகிறோம்" என்று நாங்கள் சம்மதம் தெரிவித்தோம். மேலும் அவர் கூறியதாவது:—

"என்னுடன் கப்பலில் இருக்கும் தோழர்களில் பெரும்பாலோர் ஜெர்மனியர்கள். அவர்கள் சாராயமும் குடிப்பார்கள். ஆனால், நான் சாராயம் குடிக்கமாட்டேன்; அதை 'ஹராம்' என்று விலக்கிவிட்டேன். நான் சிகரேட்கூட பிடிக்கமாட்டேன். இக்காரணம் பற்றி என் தோழர்கள், என்னை ஏளனம் செய்வார்கள். என்னை கூட்டத்தில் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள்."

நாங்கள் அந்த உத்தம ஐரோப்பியரை மிகவும் பாராட்டினோம்; தைரியமளித்தோம். அப்போது, தொழுகைக்கு பாங்கு சொல்லப்பட்டது. நாங்களெல்லோரும் தொழுகச் சென்றோம். அவரும் எங்களோடு வந்து ஜமாஅத்துடன் தொழுகை நிறைவேற்றினார். பிறகு, எங்களிடம் அனுமதி பெற்றுக்கொண்டார்.

"கப்பல் எப்போது பம்பாய் துறைமுகத்தை விட்டுப் புறப்படுகிறது என்பதை ஆபீஸில் போய் கேட்டுத் தெரிந்துகொண்டு, மீண்டும் சிறிது நேரத்தில் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

## மீண்டும் வந்தார்.

இரவு 8—மணி இருக்கும். இஷாத் தொழுகைக்காக அப்போதுத்தான் பாங்கு சொல்லப்பட்டது. அந்த நல்ல சந்தர்ப்பத்தில், மேற்கூறப்பட்ட ஐரோப்பிய நவ் முஸ்லிம் மிஸ்டர் லத்தீபுர் ரஹ்மான் வந்து சேர்ந்து எங்களோடு கலந்து கொண்டார்.

இவர் போய்த் திரும்புவார்; இவரை தரிசிக்கவேண்டும் என்று மற்றும் பல நண்பர்களும், மஸ்ஜிதுக்கு வரும் ஜமாஅத்தார்களும்

காத்துக்கொண்டிருந்தனர் நவ்முஸ்லிம் ஆங்கிலேயர் வந்ததும் எல்லோரும் 'மர்ஹபா' என்று வரவேற்று 'கைலாகு' கொடுத்து 'முஸாபஹா' செய்தனர்.

பிறகு நானும் சிலரும், இஸ்லாமிய சம்பிரதாயப்படி (இப்தார்) உணவு உண்டோம். பின்னர் இஷாத் தொழுகையுடன் தராவீஹ் தொழுகையும் ஆரம்பமாயிற்று. அந்த நவ்முஸ்லிம் அறிஞரும் கலந்து கொண்டார்.

தராவீஹ் தொழுகைக்குப் பிறகு, நாங்கள் அந்த ஐரோப்பிய நண்பருடன் உட்கார்ந்து இரவு 12–மணி வரை, மத விஷயமாகவும் அரசியல் விஷயமாகவும் சமூக வாழ்வு பற்றியும், மேனுட்டுப் பழக்க வழக்கங்களை பற்றியும், இந்திய—இஸ்லாமியக் கலாசாரம் பற்றியும் பரஸ்பரம் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தோம்.

## "குதிரைத் தீனியா இது"

அப்போது எங்களில் ஒருவர் ஏதோ தின்பண்டம் கொண்டு வந்து, எங்கள் முன் வைத்தார். ஐரோப்பிய நண்பர் முன்னும் அதை சமர்ப்பித்தார். அது என்ன பக்ஷணம் எனில்? சுண்டல்! அதாவது வேக வைத்த பச்சைக் கடலை! இதை அந்த ஆங்கில நவ முஸ்லிம் எடுத்துப் பார்த்து விட்டு, "இதென்ன, குதிரைத் தீனி மாதிரி இருக்கிறதே, எங்கள் ஊரில் குதிரைகளுக்கு இதை உணவாகக் கொடுக்கிறார்களே!" என்றார்.

அப்போது எல்லோரும் சப்தமிட்டுச் சிரித்து விட்டோம். வாஸ்தவம் தான். மேனுட்டில் பச்சைக் கடலையையும் கோதுமையையும் குதிரைகளுக்குத் தீனியாகக் கொடுக்கிறார்கள். நம் இந்தியாவிலோ—உணவுப் பொருள் தட்டுப் பாட்டின் காரணத்தால், கடலை, கொள்ளு, பட்டாணி, முதலியவைகளை நம் ஏழை இந்தியர்கள், வறுத்தோ, வேக வைத்தோ, சுண்டலாக்கியோ தின்று விடுகிறார்கள். இது அந்த ஐரோப்பியர்க்கு புதுமையாய்த் தோன்றியதில் ஆச்சரியமில்லை.

## ஸஹரி உண்ண வில்லை.

இரவு 12–மணிக்குப் பிறகு, அந்த ஐரோப்பிய நவ் முஸ்லிம், பம்பாய் மஸ்ஜிதை அடுத்த எங்கள் ஜாகையிலேயே சயனித்துக் கொள்ளலானார். தூங்கப் போகு முன், நாங்கள் அவரை நோக்கி "இரவு 3–4 மணிக்கு நாங்கள் எழுந்து ஸஹரி உணவு உண்டு, நோன்பு வைப்போம். அப்போது தங்களை எழுப்பலாமா?" என்று கேட்டோம்.

அதற்கவர் "நான் சொந்த ஊரை விட்டு வெளியூர் வந்த பிரயாணி (முஸாபிர்) அல்லவா? என் மீது நோன்பும் ஸஹரி உணவும்

கடமை யில்லையே; தயவு செய்து என்னை அதிகாலையில் ஸுப்ஹு தொழுகை ஜமாஅத்துக்கு எழுப்பி விடுங்கள். நான் தொழுகையை விட முடியாது” என்று கேட்டுக் கொண்டார்.

அவ்வாறே, அந்த நல்ல நவ் முஸ்லிம் பஜ்ரு நேரத்தில் எழுந்து ஸுப்ஹு தொழுது கொண்டார். அந்நாள் வெள்ளிக் கிழமை ஜும்ஆ தினமாகவும் இருந்ததால், அவர் அன்று பிற்பகல் வரை எங்களிடமே இருந்து, பெரிய மஸ்ஜிதில், ஜும்ஆவும் தொழுது கொண்டு, பேரானந்த மடைந்தார்.

இவ்வாறாக, ஐரோப்பாவில் எங்கோ பிறந்த ஒருவர், இந்தியா வந்து நம் முஸ்லிம்களோடு முஸ்லிமாய், யாதொரு நிற, இன, உயர்வு தாழ்வு இன்றி, இஸ்லாமிய சகோதரத்துவத்துட னிருந்து, தொழுது வணங்கினர்.

பிறகு, பிற்பகல் 3—மணிக்கு ஜனுப் லத்தீபுர் ரஹ்மான் என்னும் அவ்வாங்கில நவ் முஸ்லிம், தம் உத்தியோகத்தையும் கடமையையும் நாடி, எங்களிடம் விடை பெற்றுக் கொண்டு, பம்பாய் ஹார்பருக்குப் போய்ச் சேர்ந்தார்.


## மஜ்முஉ முனாஜாத்து

சுத்த தமிழ்.

(இரண்டாம் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஹக்கு முனாஜாத்து, யாஸைய்யிதி மாலை, யாகுத்பா மாலை, தலை பாத்திஹா, ஸலவாத்துப்பாட்டு, முத்துமணி மாலை, பக்தி ஆனந்த பாத்திமுத்து மாலை, முஹியித்தீன் முனாஜாத், காஜாபந்தேநவாஸ் முனாஜாத்து, ஸாசுவதீ மாலை, காஸீம் புலவர் இன்னிசை, கலியாண வாழ்த்துப் பதங்கள் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன.

இதன் விலை நயா பைஸா. 52

ஷை அரபுத் தமிழ் விலை ரூ. 1–28

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

**ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,**

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

தமிழ் நாட்டு முஸ்லிம்களது நன்மைக்காக திருக்குர் ஆனின் தப்ஸீரை தமிழ் பாஷையில் மிகவும் விளக்கமாகவும், தெளிவாகவும், சங்கை பொருந்திய ஸுன்னத்து வல்ஜமாஅத்தின் உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப்பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, மிகப் பிரயாசையோடு யாவரும் ஆமோதித்து புகழத்தக்க விதமாய் விளக்கத்தோடு இத் தப்ஸீரை எழுதி அச்சிட்டு வெளியிட்டிருக்கிறோம்.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழகாக எழுதி போட்டோ பிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்து அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யாணமும், ஷஃனு நுஸூல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங்களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

**முதல் பாகம் :** இந்த தப்ஸீர் ஸூறத்து பாத்திஹா—பகருவி லிருந்து ஸூறத்துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில்) 5¼-ஜுஸு வரை
இதன் விலை ரூ. 10-00

**இரண்டாம் பாகம்:** ஸூறத்துல் மாயிதா முதல் ஸூறத்துத் தௌபா முடிய (சுமார் 5-ஜஸுஉ) இரண்டாம் பாகமாக வெளி வந்திருக்கிறது.
இதன் விலை ரூ. 10-00

**மூன்றும் பாகம்:** ஸூரே யூனுஸ் முதல் ஸூறத்துந் நஹ்ல் முடிய 7-ஸூருக்களின் தப்ஸீர் மூன்றும் பாகமாக வெளி வந்திருக்கிறது.
இதன் விலை ரூ. 10-00

**நான்காம் பாகம்:** ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூரத்து நூர் முடிய 8 ஸூராக்களின் தப்ஸீர் நான்காம் பாகமாக வெளி வந்திருக்கிறது.
இதன் விலை ரூ. 10-00

5-ம் பாகம் அச்சாகிறது.

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**
கே. 20 ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ், 5

# முஸ்லிம் மன்னரின் ஹிந்து ராணிகள்

டி. எப். ஆர். மஆலி சாஹிபு (பாகவி)

[5]

## வீர தீரத் துளஸிபாய்

ஷஹின்ஷாஹ் அவுரங்கஜேப் மன்னர் காலத்தில், புர்ஹான்பூர் என்ற பிரதேசம் மிக முக்கியத்துவம் பெற்றிருந்தது. அதை அப்போது துளஸிபாய் என்ற ஹிந்து ராணியின் கணவனும் இதர மராட்டியரும் கைப்பற்றி, எதேச்சையாய் ஆங்காங்கு ஆட்சி புரிந்து கொண்டிருந்தனர்.

ஹிஜ்ரி 1118-ம் ஆண்டு, ஹஜ்ரத் அவுரங்கஜேப் மன்னர் காலஞ் சென்று மறைந்துபோனர். அவுரங்கஜேபுடைய பிள்ளைகளான இளவரசர்கள், தங்களுக்குள் ஒற்றுமை யில்லாமல் சச்சரவிட்டுக் கொண்டு, சிர்குலைந்து கொண்டிருந்தார்கள். எனவே, போர்க்குணம் படைத்த துளஸிபாயும் அவளது கணவரும், அடக்குவாரற்று அட்டகாசம் புரிந்து கொண்டிருந்தனர். முன்னர் இவர்களது ஆதிக்கத்திலிருந்து முகலாயர்களால் ஆக்ரமிக்கப்பட்டு, முஸ்லிம்களிடம் இருந்துவந்த புர்ஹான்பூர் கொத்தளத்தை, இவர்கள் மீண்டும் பிடித்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

எனவே, ஹிஜ்ரி 1121-ல் இவர்கள் துளஸிபாய் தலைமையில் 1600 குதிரைப்படை வீரர்களுடனும், கணக்கில் அடங்காத காலாட் படை வீரர்களுடனும் படையெடுத்து தக்காணப் பிரதேசத்தில் 'ரான்வீர்' என்ற கிராமத்தில் பாளையம் போட்டுத் தங்கி யிருந்தனர். புர்ஹான்பூர் என்பது இந்த ஊரிலிருந்து ஏழு மைல் தூரத்தில் இருந்தது. இங்குத் தங்கி, துளஸிபாய் தன்னுடைய படை வீரர்களை வியூகம் வகுத்து, போர்முறை சொல்லிக் கொடுத்து, தயார் பண்ணிக் கொண்டிருந்தனள்.

## அமீர் அஹ்மத்கான் சேவை

மேற்படி துளஸிபாயையும், மற்றும் மராட்டிய கலகக்காரர்களையும் அடக்கி ஒடுக்கவும் எதிர்த்துப் போரிடவும், வீரர் அமீர் அஹ்மத்கான் என்பவர் 'சேரபேதார்' ஆக நியமிக்கப் பட்டார். இந்த முஸ்லிம் தளகர்த்தர் மகா கெட்டிக்காரராகவும், பராக்கிரம சாலியாகவுமே இருந்தார். ஆனால், போதிய ஆட்பலமும் பக்கத் துணையும் சாதனங்களும் இல்லாததால், துளஸிபாய் படைமீது திடீர் தாக்குதல் புரிய

மல், தயங்கிக் கொண்டிருந்தார். இதனால், இவர் சோர்வடைந் துள்ளார் என்று துளஸிபாய் கருதிக் கொண்டாள்.

எனவே, வீராங்கனையான துளஸிபாய், சுபேதார் அஹ்மத் கானுடைய சமுகத்தில் தூது ஆள் அனுப்பினாள். அந்த ஆளிடம் கொடுத்தனுப்பிய கடிதத்தில் எழுதப் பட்டிருந்ததாவது :—

"நான் இங்கு, 1600 குதிரைப்படை வீரர்களையும், கணக்கி லடங்காத காலாட்படை சேனைகளையும் கொண்டு வந்திருக்கிறேன். புர்ஹான்பூரை கூடிய சீக்கிரம் தாக்கிப் பிடித்து விடுவேன் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு. ஆனால் உமக்கு ஒரு சந்தர்ப்பம் தருகிறேன். ஒன்று, நீர் உடனே புர்ஹான்பூர் ஸ்தலத்தைப் பூரண மாய் என்னிடம் ஒப்படைத்து விட்டுப் போய்விட வேண்டும்; இன்றேல் அந்த ஸ்தலம் உங்களிடம் இருக்க வேண்டுமானால், ஆண்டு தோறும் 11 ஆயிரம் ரூபாய் ரொக்கம், கப்பமாக எனக்கு கொடுப்ப தாக வாக்குறுதி கொடுக்க வேண்டும். இந்தக் கணக்குப்படி இது வரை அந்த ஸ்தலம் உங்கள் வசம் இருந்து வந்ததற்கு, கணக்குப் பார்த்து, பாக்கி பணத்தையும் இப்போதே தூது ஆள் வசம் கொடுத்துவிட வேண்டும்" என்பது.

## சுபேதாரின் துணிச்சல்

இதற்கு சுபேதார் அஹமத்கான் இணங்கவில்லை. கேவலம், ஒரு பெண்ணுடைய வீண் மிரட்டலுக்கு ஒரு ஆண் சிங்கம் பணிந்து போவதா என்று வீறு கொண்டெழுந்தார். அவரது துரதிருஷ்ட வசமாக, அப்போது ஒரு பெரும் படை ஏதோ காரி யார்த்தமாக டெல்லிக்குப் போய் இருந்தது. மிச்சம் இருக்கும் படைகளை எண்ணி கணக்கிட்டுப் பார்த்தார். 800 குதிரை வீரர்கள் தான் இருந்தனர். இந்த சொற்ப தொகையினரைக் கொண்டு என்ன செய்வதென்று யோசித்தார்.

ஆயினும் அஹ்மத்கான் எதிலும் துணிச்சலாகப் பாய்ந்துவிடும் சுபாவமுடையவராக இருந்தார். 'வல்லவனுக்குப் புல்லும் ஓர் ஆயு தம்' என்பதற்கேற்ப கைவசமுள்ள சொற்ப படைகளைக் கொண்டே துளஸிபாயின் பெரும் படையை தன்னால் வென்றுவிட முடியும் என்று அசட்டு தைரியம் கொண்டார். எனவே, வீரர் அஹ்மத்கான் படைகளை செலுத்திக் கொண்டு, துளஸிபாயை எதிர்த்துப் போரிடப் புறப்பட்டு விட்டார்.

## துளஸிபாயின் தந்திரம்

வீரி துளஸிபாய் தன்னுடைய படைகளை மூன்று பகுதிகளாகப் பிரித்து, ஒரு பகுதியை நேரில் புர்ஹான்பூரை முற்றுகை இடுவதற் காக அனுப்பி விட்டாள். மற்றொரு பகுதிப் படையை, பல

திக்கிலும் பரவிச் சென்று அட்டூழியங்கள் புரிந்து, ஒழுங்கற்ற முறையில் கண்ட கண்டபடி தாக்கி கஷ்ட நஷ்டத்தை உண்டாக்குவதற்கு அனுப்பி விட்டாள். இறுதியாக கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு மூன்றுவது பகுதிப்படையை தன்னுடன் வைத்துக்கொண்டு, சுபேதார் அஹ்மத்கானை எதிர்த்துப் போரிட ஆயத்தமானுள்.

துளஸிபாய் படைக்கும் அஹ்மத்கான் படைக்கும் பலநாள் தொடர்ந்து போர் நடந்தது. பல பேர் கொல்லப்பட்டனர்; பல குதிரைகள் மாண்டன. துளஸிபாய்க் கோஷ்டியின் எதிர்ப்பை, சொற்ப பேர்களை வைத்துக் கொண்டு வீரன் அஹ்மத்கானுல் சமாளிக்க முடியவில்லை.

இறுதியாய் அஹ்மத்கான், படுகாய மடைத்து சோர்ந்து விட்டார். இந்த சமயம், ஒரு குதிரை வீரன் ஓடிவந்து, புர்ஹான்பூர் தலத்தை எதிரிகள் முற்றுகை யிட்டு பிடித்துக்கொண்டு விட்டனர் என்று செய்தி சொன்னுன். அஹ்மத்கானுக்கு இடிமேல் இடி விழுந்தது போலாயிற்று. ஆயினும் தைரியத்தை கைவிடவில்லை. பயந்தோடுவதைக் காட்டினும் போர்க்களத்தில் ஷஹீதாகி மடிவது மேல் என்று கருதித் துணிந்தார்.

## வீராவேச மரணம்.

திடீர் என்று சுபேதார் அஹ்மத் கான், வீராவேசம் கொண்டு, துளஸிபாயுடன் எதிர்த்துப் போரிட முற்பட்டு, போர்க்களம் சேர்ந்தார். நல்ல சந்தர்ப்பத்தில், மேற்கொண்டு (டில்லிக்குப் போயிருந்த படையும் வந்து சேர்ந்து) உதவிப் படையும் கிடைத்தது. எனவே, அஹ்மத் கானுக்கு உற்சாகம் மேலிட்டு புத்துணர்ச்சியுடன் பாய்ந்தார்.

இந்தப் போராட்டத்தில், மராட்டியர்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது. அவர்கள், அஹ்மத் கானின் எதிர்ப்பைக் கண்டு நடுங்கிப் போய்விட்டனர். மராட்டியர் ஓடத் தொடங்கினர். அஹ்மத் கானின் படைகள் ஒரு மைல் தூரம்வரை அவர்களைப் பின்தொடர்ந்து விரட்டிச் சென்றனர்.

இந்தப் போராட்டத்தில் வீரர் அஹ்மத் கான், அளவுக்கு மீறி உழைத்ததால், உடல் தளர்ச்சி யடைந்திருந்தார். மேலும், கை வெட்டுண்டு, மண்டையிலும் பலத்த காயம் பட்டிருந்தது. மேற்கொண்டு நடக்க முடியவில்லை அவரால்.

எனவே படையை விட்டு ஒதுங்கிச் சென்று ஒரு மரத்தடியில் உட்கார்ந்தார். அங்கே அவரது இன்னுயிர், தனிமையில் பிரிந்து விட்டது. சுத்த வீரன் இங்ஙனம், எதிரியின் கரத்தால் வெட்டுண்டு மாளாமல், சுயமாகவே, மரணப்படுக்கையில் ஆவியை நீத்தார்.

## ஷாஹ் ஆலம் வருகை.

சுபேதார் அமீர் அஹ்மத்கான் மரணமடைந்த பின், தக்க எதிர்ப்பாரின்றி மராட்டியவர்கள் துணிச்சல் கொண்டு விட்டனர். நகரத்துக்குள் புகுந்து, பலவாறு அட்டூழியங்கள் புரியத்தொடங்கி விட்டனர். எங்கும் கொள்ளையும் கொலையும் அராஜகமும் தலைவிரித்தாடின. நல்ல மனிதரும், பிரமுகர்களும், அறிஞர்களுங் கூட அவமானத்துக்குள்ளாயினர். ஒரு சிலர், மராட்டியர்களுக்குத் தண்டப்பணம் கொடுத்து உயிர் தப்பிப் போய்விட்டனர்.

அப்போது மன்னர் ஷாஹ் ஆலம், வேலூர் ஊரில், ராஜாங்கப் படைமுகாமில் ஈடுபட்டிருந்தார். அவருக்கு, இச்சமாசாரம் ஓரளவு தெரிந்தது. உடனே அங்கிருந்து சர்வ ஆயத்தம் புரிந்து கொண்டு திரும்பி வந்தார். வந்தபின்பே, அமீர் அஹ்மத்கானின் மரணச் செய்தியும் அவருக்குத் தெரிந்தது. வருந்தினர். வருந்தி என்ன பயன்.?

உடனே ஷாஹ் ஆலம், தன் படைபலம் முழுவதையும் திரட்டிக் கொண்டு, புர்ஹான்பூரை நோக்கிப் புறப்பட்டார். தன்னை, ஷாஹ் ஆலம் பெரும் படையுடன் எதிர்க்க வருகிறார் என்று கேள்விப்பட்ட மராட்டிய வீரவனிதை துளஸிபாய், தன் படைகளையெல்லாம் இன்னமும் நன்றாய் உறுதிப் படுத்திக்கொண்டு, ஷாஹ் ஆலமை எதிர்த்து நிற்க ஆயத்தமாய் விட்டாள்.

## வான்வீர் போர்க்களம்.

'வான்வீர் சராய்' என்ற மைதானத்தில் பெரும் போர்க்களம் மூண்டது. இரண்டு சேனை சமுத்திரங்களும் ஒன்றுடன் ஒன்று மோதின. மூன்றுநாள் தொடர்ந்து கடும்யுத்தம் நடைபெற்றது.

ஷாஹ் ஆலம் மகா அரசியல் தந்திரம் கற்றவர். வீரத்தாலும் சரி, தந்திரத்தாலும் சரி, அவரை அக்காலத்தில் யாரும் வென்றுவிட முடியாது. மராட்டியத்தலைவியான துளஸிபாயும் எவ்வளவோ தந்திரங்கள் புரிந்து பார்த்தாள். ஒன்றும் பயன்படவில்லை. வீர முஸ்லிம் படைகளை வெல்ல எளிய மராட்டியரால் முடியுமா.?

துளஸிபாயின் ராஜ தந்திரம் துணையாக இல்லாமற் போயிருந்தால், அந்த மராட்டியரால் ஒருநாள் கூட, ஷாஹ் ஆலமின் படைகளை எதிர்த்து நின்று சமாளித்திருக்க முடியாது.

## துளஸிபாயின் முடிவு.

இறுதியாய், இஸ்லாமிய முகலாயப் படைகளுக்கே வெற்றி கிடைத்தது. மராட்டியர்கள் தோல்வியடைந்து விட்டனர். அவர்களின் ஆயிரக்கணக்கான படைவீரர்களில் ஒருசில நூறுபேர் உயிர்

பிழைத்து மிஞ்சினர். ஏனையோர் உயிர் காப்பாற்றிக் கொண்டு ஓட்டம் பிடித்தனர். வெகுதூரம் வரை, முஸ்லிம் வீரர்கள் மராட்டியர்களைத் துரத்திக் கொண்டு போய்விட்டனர்.

வீரப் பெண் துளஸிபாயும் மிக தீரத்துடன் தான் போரிட்டாள். என்னவானாலும் ஆண்பிள்ளை ஆண்பிள்ளைதான்; பெண்பிள்ளை பெண்பிள்ளைதான். இறுதியாய் ஷாஹ் ஆலம்வசம், துளஸிபாய் பிடிபட்டுவிட்டாள்.

முஸ்லிம்கள் மீண்டும் புர்ஹான்பூரை கைப்பற்றிக் கொண்டனர். துளஸிபாயை, டெல்லிக்கு அழைத்துச் சென்று ஆதரவளித்தனர். அதன் பின் துளஸிபாயின் முடிவு யாதாயிற்று? பிறகு அவள் யாருடைய வாழ்க்கைத் துணைவியாய் - ராணியாய் யிருந்தாள் என்பது சரியாகத் தெரிய வில்லை.


# உர்து ஸலீஸ் காயிதா

இது உர்து கற்றுக் கொள்வதற்கு சுலபமான பாலர் பாடம். இதில் படங்களைக் கொண்டு இலகுவாய் குழந்தைகள் உர்து வார்த்தைகளைக் கற்றுக் கொள்ள புதிய முறையில் போடப்பட்டுள்ளது. இரண்டு கலர்களில் அச்சிடப்பட்டது.

விலை நயா பைஸா. 32

தற்கலை பீர்முஹம்மது ஒலியுல்லா அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

# ஞானக் கோர்வை

இதில் மேற்படி ஒலி நாயகமவர்கள் அருளிய பிஸ்மில் குறம், ஞானப் பால், ஞானப்பூட்டு, ஞானப்புகழ்ச்சி, ஞான மணிமாலை, ஞானக்குறம், ஞானரத்தின குறவஞ்சி, ஞான ஆனந்தக்களிப்பு, திருமெஞ்ஞான சரநூல், ஞான முச்சுடர்ப் பதிகம் முதலியன அடங்கி யிருக்கின்றன.

கலிகோ பைண்டு விலை ரூ. 3-80

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,**

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# தென்னிந்திய முஸ்லீம் கல்விச் சங்கம்

49, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை,
சென்னை - 14.

## ஹாபீஸ் – காரி – முஅஸ்ஸின்

ஆகியவர்களுக்குரிய

# போட்டிகள்

சென்னை மாநிலத்திலுள்ள 'ஹாபீஸ்கள்', 'காரிகள்', 'முஅஸ்ஸின்கள்' இவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும், இவர்களின் ஆற்றல், தகுதி இவைகளை உயர்த்தும் எண்ணத்துடனும் தென்னிந்திய முஸ்லீம் கல்விச் சங்கம் ஒரு போட்டி நடத்த முடிவு செய்துள்ளது.

போட்டியில் சென்னை மாநிலத்திலுள்ள 25 வயதுக்கு மேற்படாத முஸ்லீம்கள் (ஆண்கள் மட்டும்) கலந்து கொள்ளலாம். போட்டியில் பங்கு பெறுபவர்கள் சென்னை மாநிலத்தைச் சார்ந்தவர்கள், 25 வயதுக்கு மேற்படாதவர்கள் என்பதற்கு அத்தாட்சிப் பத்திரங்கள் தேவை. இவைகளை மத்ரஸா அல்லது பள்ளிக்கூடம் இவைகளின் நாஸிர் அல்லது தலைமை உபாத்தியாயர் இவர்களிடமாவது, அல்லது கிராம முன்சீப், கணக்கப்பிள்ளை இவர்களிடமாவது பெறலாம்.

பரிசுகள்

| | | | |
|---|---|---|---|
| 'ஹாபீஸ்' — | முதல் பரிசு | ரூ. | 200/- |
| | இரண்டாம் பரிசு | ரூ. | 100/- |
| 'காரி' — | முதல் பரிசு | ரூ. | 200/- |
| | இரண்டாம் பரிசு | ரூ. | 100/- |
| 'முஅஸ்ஸின்' — | முதல் பரிசு | ரூ. | 60/- |
| | இரண்டாம் பரிசு | ரூ. | 30/- |

## யோக்கியதைகள்

போட்டிகளில் பங்கு கொள்பவர்கள் கீழ்கண்ட யோக்கியதைகளை உடையவர்களாக இருக்கவேண்டும்.

'ஹாபீஸ்' —திருக்குர்ஆன் முழுமையும் மனப் பாடம் செய்திருக்கவேண்டும். (ஹாபீஸ்-எ-குர்ஆன்) வார்த்தைகளின் உச்சரிப்பு தெளிவாகவும், தப்பில்லாமலும் இருக்கவேண்டுவது அவசியம்.

'காரி' —இந்தப் போட்டியில் பங்கு கொள்பவர்கள் 'கிர்ஆத்', 'தஜ்வீத்' சட்டங்கள் தெரிந்தவர்களாக இருப்பது நலம்.

'முஅஸ்ஸின்' —குரல் உயர்ந்ததாகவும் இனிமையாகவும் இருப்பதுடன் உச்சரிப்பும் தெளிவாக இருக்கவேண்டும்.

மேற்படி போட்டிகளில் பங்கு பெறுபவர்கள் தென்னிந்திய முஸ்லீம் கல்விச் சங்க கௌரவச் செயலாளருக்கு மனுச்செய்து கொள்ளவேண்டும். மனுக்களில் கலந்து கொள்பவர்களின் பெயர், விலாசம், ஊர், வயது இவைகளைக் குறிப்பிடுவதோடு, இந்தப் போட்டி அறிக்கையில் கண்டுள்ள அத்தாட்சிப் பத்திரங்களையும் வைத்து அனுப்பவேண்டும்.

போட்டிகள் மே மாதக் கடைசியிலாவது, ஜூன் மாத ஆரம்பத்திலாவது நடைபெறும்.

(ஒப்) **எம். எஸ். ஏ. மஜீத்**

கௌரவச் செயலாளர்.

To

கௌரவச் செயலாளர்,

தென்னிந்திய முஸ்லீம் கல்விச் சங்கம்,

49, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை,

சென்னை - 14.

1. பெயர்

2. தந்தை, அல்லது
   பாதுகாப்பாளர் பெயர்

3. வயது

4. முழு முகவரி

5. படித்த அல்லது படித்துக் கொண்டிருக்கும்
   பள்ளி அல்லது மத்ரஸாவின் பெயர்.

6. பங்குபெற விரும்பும் போட்டி:—
   கிராத் — ஹிபிஸ் — அஸான்
   (வேண்டாதனவற்றை அடித்து விடுக)

7. தேவையான பத்திரங்கள்:

   (அ) வயது

   (ஆ) பிறந்த இடம்

மேற்கண்ட விபரங்கள் யாவும் உண்மை.

இடம் :

தேதி :

போட்டியிடுபவர் கையொப்பம்.

# மாநிலம் மறக்க முடியாத மாவீரர்

## [7]

1878-ம் வருடம் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் விளக்கு (Incandescent Light) பற்றிப் பரிசோதனை நடத்த ஆரம்பித்தார். மற்றவர்கள் நடத்தியுள்ள பரிசோதனைகளைக் கருத்தில் கொண்டும் தமக்குக் கிடைக்கும் விஞ்ஞான கட்டுரைகளைப் படித்துக் கொண்டும் வழக்கம்போல இந்த ஆராய்ச்சிகளில் அவர் ஈடுபட்டார். அவர் மேற்கொண்ட காரியம் பிரமாண்டமானது. எடிசன் ஸ்தாபனம் பத்திரப்படுத்தி வைத்துள்ள முன்னூறு பக்கங்கொண்ட இரண்டாயிரத்து ஐந்நூறு குறிப்புப் புத்தகங்களில் மின்சார விளக்கு பற்றிய பரிசோதனைகள் சம்பந்தமான குறிப்புப் புத்தகங்கள் இருநூற்றைம்பது ஆகும். அதிசயிக்கத்தக்க அரும் பெரும் சாதனைகளி லொன்றுக்கு இக்குறிப்புகளே அடிப்படையாக அமைந்தன.

அந்தக் காலத்திலே மின்சார எஞ்சினீரிங் அதன் குழந்தைப் பருவத்தில் ஆரம்ப தசையில் இருந்தது. ஆயினும், ஐந்து ஆண்டுகளுக்குள் மின்சார விளக்குத் தொழிலுக்கு எடிசன் அஸ்திவாரமிட்டு, அதனைப் பொதுஜன உபயோக சாதனமாக்கினர். மின்சார விளக்கை அபிவிருத்தி செய்ததோடு மின்சார தயாரிப்பு சாதனம் (Generator) டைனமோ மீட்டர் முதலியவைகளையும் அவர் அபிவிருத்தி செய்தார். மின்சாரத்தை முதல் முறையாகப் பரிசோதித்துப் பார்க்கும் பொருட்டு, நியூயார்க் நகரில் ஒரு சதுரமைல் விஸ்தீரணமுள்ள பகுதியைச் சுற்றி மின்சாரக் கம்பிகளும் நாட்டினர். இது மிகவும் சிரமமான காரியம். எனினும், ஒழுங்கான முறையில் திட்டமிடப்பட்டுக் காரியம் நிறைவேற்றப்பட்டது. அவரது நண்பரொருவர் நவின்றபடி, "எடிசனின் தலை சிறந்த கண்டு பிடிப்பு ஒழுங்கான ரீதியில் அமைந்த ஆராய்ச்சி யாகும்." சுடர் விட்டுப் பிரகாசிக்கும் விளக்கு பற்றி அதுவரை எவரும் பரிசோதனை நடத்தியதில்லை. இரு பிளாட்டினம் சுருள்களைக் கொண்ட விளக்குக்கு பிரிட்டனிலே 1841-ம் வருடம் ஏகபோக உரிமை வழங்கப்பட்டிருந்தது. (இந்த இரு சுருள்களுக் கிடையேயுள்ள இடை வெளியை அடைக்க கரித்தூள் பயன்படுத்தப்பட்டிருந்தது) இந்த விளக்கில் மின்சாரம் பாய்ச்சப்பட்டதும் கரி பிரகாசித்தது. பிளாட்டினம் கம்பிகளிலே மின்சாரம் பாய்ச்சப்பட்டதும் அந்தக் கம்பிகளே பிரகாசிக்கும் விளக்கு சம்பந்தமாக அமெரிக்கரொருவர் ஏகபோக உரிமை பெற்றிருந்தார். பிறைவடிவமுள்ள விளக்கும் கூட இருந்தது. எனினும், இந்த விளக்குகள் அனைத்தும் சக்தியில்லாதவைகளாக இருந்ததோடு அதிகச் செலவு ஏற்படுத்தக்கூடிய

வைகளாகவும் பொதுஜன உபயோகத்துக்கு லாயக்கற்றவைகளாகவும் இருந்தன.

சாதாரண களிமண் குழாயின் தண்டைச் சுற்றிப் பிளாட்டினம் கம்பியைச் சுற்றிக் கட்டி முதலில் எடிசன் பரிசோதித்துப் பார்த்தார். மின்சார ஓட்டத்தால் பிளாட்டினம் அநேகத்தடவை சூடாக்கப் பட்டதும் அது கடினமாகி, அதிக உஷ்ணத்தைத் தாங்கும் சக்தியையும் அது பெற்றுக் கொள்வதை அவர் கவனித்தார். சூடு உண்டாக்குவதால் பிளாட்டினத்திலிருந்து ஆவி அகற்றப்பட்டு அது (பிளாட்டினம்) கடினமாகுகிறது போலும், இந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, காற்றுப்போக்கி பம்ப் (Vacuum Pump) வுடன் பிளாட்டினம் கண்ணாடி அடைப்பைச் சேர்த்தார்; அதன் வழியாக அவர் மின்சாரம் பாய்ச்சியபோது பிரமிக்கத்தக்க பிரகாசத்துடன் விளக்கு எரிந்தது.

பின்னர், விளக்கில் காற்றுப் பிரவேசிக்காமல் நீண்ட காலம் வரை காப்பாற்றுவதில் அவர் கவனம் செலுத்தினர். கண்ணாடி செய்யும் இயந்திரம் அப்போது இல்லாமையால் கைதேர்ந்த கண்ணாடி நிபுணரொருவரை அவர் நியமித்தார். இந்நிபுணர் கஷ்டப்பட்டு கரங்களாலேயே முதல் பரீக்ஷார்த்த பல்புகளைச் செய்து, காற்றுப் போக்கி பம்பு (Vacuum Pump) வுடன் அவை இணைக்கப்பட்டிருக்கும் போதே அவற்றை அடைக்கவும் செய்தார்.

விளக்கில் காற்று பிரவேசிக்காமல் தடுப்பதன் மூலம் அதை நீண்ட காலம் எரியச் செய்யலாம் என்பது நிரூபிக்கப்பட்டது. பிளாட்டினத்தாலாகிய மெல்லிய கம்பி (Filament) அதிகச் செலவு ஏற்படுத்தக் கூடிய தென்பதையும் அதனால் செலவாகும் மின் சக்தி, அது அளிக்கும் வெளிச்சத்தைவிட அதிகமாக இருக்கிற தென்பதையும் அவர் கண்டுகொண்டார். எனவே, இதர உலோகங்களை அவர் பரிசோதித்துப் பார்த்தார். அம்முயற்சி பயனளிக்கவில்லை.

எனினும், எடிசன் செய்துவந்த பரிசோதனை பற்றிய தகவல்கள் பத்திரிகைகளுக்குக் கிடைத்ததும் வாயு (Gas) பங்கு விலை வீழ்ச்சியடைந்தது. லண்டனைச் சேர்ந்த 'சார்டர்டு காஸ் கம்பெனி' யின் பங்குகள் அனேக ஆயிரம் பவுன் குறைந்து விட்டன.

எடிசன் செய்துவந்த பரிசோதனைகளால் அவருக்குப் பல்லாயிரக் கணக்கான டாலர் செலவழிந்து வந்தது. 'எடிசன் எலெக்ட்ரிக் லைட் கம்பெனி' இப்பரிசோதனைகளுக்காக அவருக்கு நிதி உதவி அளித்து வந்தது. மூன்று லட்சம் டாலர் மூலதனத்துடன் அமைக்கப்பட்ட அக்கம்பெனி முதலில் எடிசனுக்கு ஐம்பதினாயிரம் டாலர் அளித்திருந்தது. இத்தொகை செலவழிந்து பரிசோதனையும் பய

னளிக்காமல் போகவே, கம்பெனி பங்குதாரர்கள் முணுமுணுக்க ஆரம்பித்தனர். தயக்கத்துடன் மீண்டும் ஐம்பதினாயிரம் டாலர் அவருக்கு வசூல் செய்து அளித்தார்கள். எடிசனின் பரிசோதனைகள் முன்னேறிச் சென்றன.

மின்சார விளக்குபற்றிய பரிபூரணமான பரிசோதனைகள் நடத்தி வந்த அவருக்கு ஒருநாள் நடு நிசியின்போது 'ஞானோதயம்' ஏற்பட்டது. கரித்தூள் கொண்ட மெல்லிய இழைபோன்ற கம்பியை ஏன் உபயோகிக்கலாகாது என்ற உணர்ச்சி அவருக்கு ஏற்பட்டது. எனவே, அபூர்வ உலோகமான பிளாட்டினத்தை விட்டுவிட்டு மிகச் சுலபமாகக் கிடைக்கக்கூடிய நூல் இழை (Cotton sewing thread) யைக் கொண்டு அவர் பரிசோதனை நடத்த ஆரம்பித்தார். மண் உலைப் பாண்டத்தில் சுடப்பட்டுப் பின்னர் மெதுவாகக் குளிரச் செய்யப்பட்ட கரித்தூளை இழைகளில் வைத்து அடைக்குமாறு அவர் உத்தரவிட்டார். 1/64 அங்குல விட்டமேயுள்ள இம் மெல்லிய இழைகள் ஒவ்வொன்றாகப் பல்வேறு கட்டங்களில் சின்னா பின்னமாகி விட்டன. கடைசியில், காற்றுப் புகாமல் பத்திரப்படுத்தப்பட்ட ஒரு விளக்கில் கரித்தூள் அடைக்கப்பட்ட கம்பி பொருத்தப்பட்டது. அவ்விளக்கில் மின்சாரம் பாய்ச்சப்பட்டதும் அது பிரகாசமாக எரிய ஆரம்பித்தது. எடிசனுக்கும் அவரது சிப்பந்திகளுக்கும் மூச்சுவிடக்கூட முடியவில்லை. விளக்கு எரிந்தது அவர்களுக்கு சந்தோஷம் அளித்தது. ஆனால், அதே சமயத்திலே மிக மெல்லிய இழைபோன்ற கம்பி எவ்வளவு காலம் எரிந்துக் கொண்டிருக்கும் என்னும் சந்தேகம் அவர்களுக்கு கவலை அளித்துக் கொண்டிருந்தது.

இரண்டுமணி நேரம் ஆயிற்று. இன்னும் விளக்கு பிரகாசத்துடன்தான் எரிந்துக் கொண்டிருந்தது. ஆயிற்று மூன்று, ஆறு மணி, பத்துமணி நேரம் ஆகியும் அது எரிந்துக் கொண்டுதான் இருந்தது. எடிசன் தமது படுக்கையில் படுத்துத் தூங்க ஆரம்பித்து விட்டார். அறுபதுமணி நேரத்திற்குப் பிறகு அவர் கண்ணயர்வது இதுதான் முதல்தடவை. அவரது வேலையை அவரது உதவியாளர்கள் கவனிக்கலாயினர். ஆராய்ச்சிக் கூடத்திலிருந்தும் இயந்திரக் கடைகளிலிருந்தும் தொழிலாளர்கள் திரள்திரளாக வந்து வேடிக்கை பார்க்க ஆரம்பித்தனர். முப்பது மணிநேரம் சென்ற பிறகும் விளக்கு எரிந்துக் கொண்டிருப்பதைக் கண்டு எடிசனின் உதவியாளர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். நாற்பதுமணி நேரத்துக்குப் பிறகு எடிசன் பிரகாசத்தை (Voltage) இன்னும் அதிகரிப்பது பற்றிப் பரிசோதனை நடத்தலானார். இதன் காரணமாகக் கம்பி எரிந்து விட்டது.

(தொடரும்)

(36-வது பகுதி)

# திருக் குர்ஆன் : : : :

# : : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

## முஸ்லிம்களுக்கு இறுதியில் ஜயம் கிடைக்கும்.

"(பண்டைகாலத்துக்) காபிர்கள் இதை எண்ணிக் கொள்ள வேண்டாம்: அவர்கள் எம்முடைய பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டு போய்விட்டார்களென்று! அவர்கள் ஒருபோதும் (முஸ்லிம்களாகிய) நம்மை அபஜயமடையச் செய்துவிட முடியாது. ஏ, முஸ்லிம்களே! மதப்போரில் காபிர்களுக்கு விரோதமாக நீங்கள் உங்கள் சக்திக்கேற்ற வண்ணம் முனைந்து வாருங்கள்; யுத்த சாதனங்களை சேகரித்துக் கொள்ளுங்கள். அபரிமிதமாய் குதிரைகளை (சேணம்) பூட்டிவையுங்கள். இப்படி யெல்லாம் செய்வதால், நீங்கள் அல்லாஹ்வுடைய எதிரிகளின் உள்ளங்களில் அச்சத்தை (பீதியை) உண்டாக்கி வைப்பவர்களாவீர்கள். இதரர்களும் உங்களைக்கண்டு அச்சப்பட ஹேதுவாகும்.

"(பின்னால் என்ன நிகழப்போகிறதென்ற) உண்மைகளை நீங்கள் (இப்போது) அறியமாட்டீர்கள். அதை அல்லாஹு (தஆலா) தான் நன்கு அறிவான். மேலும் அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் (பீஸபில் போருக்கு) நீங்கள் செலவு செய்கிறவற்றிற்கு உங்களுக்குப் பூரணமான நற்கூலி யுண்டு. உங்கள் பாத்தியதைகள் பறிக்கப்பட்டுப் போக மாட்டா.

"(முஸ்லிம்களே!) காபிர்கள் உங்களுடன் சமாதானம் செய்து கொள்ளப் பணிவார்களானால் நீங்கள் அதற்கு (இணங்கிப்) பணியுங்கள். அப்போதும் அல்லாஹ்வின் மீதே பூரணமான நம்பிக்கை வையுங்கள். அவன் (அந்தரங்கம்) அனைத்தையும் நன்கு கேட்பவனாகவும் அறிந்தவனாகவும் இருக்கின்றான். அங்ஙனம் (இணங்கி வந்த) காபிர்கள் உங்களுக்குத் துரோகம் செய்வார்களாயின் அப்போது, உங்களுக்கு உதவி செய்ய ஆண்டவனே போதுமானவனாக இருக்கின்றான். அந்த அல்லாஹ்வே (முன்னர்) உங்களுக்கு (உண்மை) முஸ்லிம்களின் மூலமாக, உங்களுக்கு பத்ரு யுத்தத்தில் பேருதவி புரிந்தனன். மேலும் அதனால் (பலதிற) முஸ்லிம்களுக்கிடையே- உள்ளங்களிலே விசுவாசத்தை உண்டாக்கி வைத்தனன்.

"(ஆண்டவனின் உதவியின்றேல்) நீவீர் பூலோகத்திலுள்ள செல்வத்தையெல்லாம் செலவிட்டு முயன்றாலும், அவர்களுடைய

உள்ளங்களிலே இவ்வளவு (அபார) விசுவாசத்தை போட்டிருக்க முடியாது. ஆனல், அல்லாஹு தஆலா (தன் அருளால்) அவர்களுடைய உள்ளங்களிலேயே விசுவாசத்தை (வெகு எளிதில்) போட்டு விட்டான். நிச்சயமான அ(வ்விறை) வன், மகத்தான திட்டம் போடுபவனுக இருக்கின்ருன். ஏ நபியே! அல்லாஹ்வும், உமக்கு வழிபட்ட முஸ்லிம்களும் உமக்கு உதவி செய்யப் போதுமானவர்களாயிருக்கிருர்கள்." (ஜுஸு: வஃலமூ; ஸூரா: அன்பால்; ருகூஃ:8)

## 1000 காபிர்களுக்கு 100 முஸ்லிம்கள் சரிபோதும்.

ஏ நபியே! (சத்தியப் போரான) ஜிஹாதைப்பற்றி முஸ்லிம்களுக்கு எடுத்தோதி உத்ஸாக மூட்டுவீராக. எனவே, (முஸ்லிம் படைகளாகிய) உங்களில் ஒரு இருபது பேரே, ஸ்திரமாக காலூன்றி நின்ருல் அவர்கள் இருநூறு காபிர்களுக்கு சமமானவர்களாவர். இன்னும் உங்களில் ஒருநூறு பேர்கள் ஸ்திரமாக காலூன்றி நின்ருல், இவர்கள் ஆயிரம் காபிர்களுக்கு சமதையானவர்களாய் (மிகைத்து) இருப்பர். ஏனெனில், காபிர்கள் மறுமையின் நற்கூலி யாதென்பதை அறியமாட்டார்கள். எனினும் உங்களில் (அற்ப சொற்ப) பலஹீனங்கள் இருப்பதை இறைவன் நன்கறிந்தே, உங்களுக்குத் தன் கட்டளைகளின் மூலம் உங்கள் சுமைகளைக் குறைத்துவிட்டான். எனவே, உங்களில் 100-பேர் ஸ்திரமாக நின்று (சத்தியத்திற்காக) போராடுபவர்களாயின், இவர்கள் 1000 காபிர்களையும் (வென்று) மிகைத்திருப்பார்கள்; உங்களில் ஓர் 1000 பேர் போராடினல், ஆண்டவன் ஆக்ஞைப்பிரகாரம் இவர்கள் இரண்டாயிரம் காபிர்களையும் வென்று விடுவார்கள். எப்போதும் அல்லாஹு (தஆலா) போர்க் காலங்களில், பொறுமையாளர்களின் பக்கமே (துணையாக) இருக்கின்ருன்.

(ஜுஸு: வஃலமூ; ஸூரா: அன்பால்; ருகூஃ :9)

## யுத்தக் கைதிகளை மன்னித்து விடுவதில் பேணுங்கள்

"யுத்தத்தில் பிடிபட்ட கைதிகள், தம் சமூகத்திற்குக் கொண்டு வரப் படும் பொழுது, நபியானவர், அவர்களிடமிருந்து தண்டப் பணம் (பித்யா) வாங்கிக் கொண்டு (வெறுமனே) விடுதலை செய்து விடுவது நேர்மையாக மாட்டாது. (பணச் செல்வாக்கால் விடுதலைப் பெற்றுப் போகும் இவர்கள், மீண்டும் படை திரட்டிக் கொண்டு, முஸ்லிம்கள் மீது போர் தொடுக்க முனைந்து வரக் கூடும். எனவே, கைதிகளிடம் தகுதி பாராமல், பணம் பெறுவதில் மட்டும் அவர்களுக்கு விடுதலை கூடாது; இதில் பேணுதல் வேண்டும்.) எனவே, தீர்க்கமான முறையில் எதிரிகளை (காபிர்களை) முறியடித்து அடக்காத வரை (தயா தாக்ஷண்யம் கூடாது.) ஏ நபியே (முஸ்லிம்களே) நீங்கள் உலகச் செல்வமான தண்டப் பணத்தை (பித்யாவை) பெரி

187074

தென எண்ணுகிறீர்களோ? அல்லாஹு தஆலாவே, ஆகிரத்துக் குரிய புண்ணியத்தைத்தான் பெரிதாகக் கொள்கிறான். மேலும் அல்லாஹ், மகா விவேகியாகவும் மிகைத்தவனாகவும் இருக் கின்றான்.........

"சரி (போகட்டும்:) யுத்தகள சூறைப் பொருள் (கனீமத்து) களில், உங்கள் கைக்கு கிடைத்தவைகள் உங்களுக்கு உரிமையான (ஹலாலான)வைகளே; அவைமிகவும் தூய்மையானவைகளே யாகும். இதனை நீங்கள் உண்ணலாம்; (உபயோகப் படுத்திக் கொள்ளலாம்.) (எவ்வேளையிலும்) நீங்கள் அல்லாஹு (தஆலா)வுக்கு பயந்து கொண்டே இருங்கள்; அவன் (நல்லோரை) மிகவும் மன்னிப்பவனாக இருக்கின்றான்." (ஜுஸுு: வஃலமூ; ஸூரா: அன்பால்; ருகூஃ: 9)

## அல்லாஹ்வுக்கு உயிர்பொருள் அர்ப்பணியுங்கள்

முஸ்லிம்களே! நீங்கள் (நிராயுதபாணியாக) இலேசாக இருந் தாலும் சரி, (ஆயுத சாதனத்துடன்) பளுவாக இருந்தாலும் சரி, (அல்லாஹ்வுடைய பாதையில்) சத்தியப் போருக்குப் புறப்படுங்கள். (இந்தன் முறையில்) உங்கள் உயிர், பொருள் அனைத்தையும் அல் லாஹ்வுடைய பாதையில் அர்ப்பணியுங்கள். உங்களுக்கு விவேகம் (ஆலோசனை) இருப்பின், எல்லா சந்தர்ப்பங்களிலும் ஜிஹாது (என்னும் சத்தியப் போராட்டம்) உங்களுக்கு (இகபர) நன்மை பயப்பதாகவே அமையும்."
(ஜுஸுு: வஃலமூ; ஸூரா: அத்தவ்பா; ருகூஃ: 6)

---


# அறபு த:லீமுல் புர்கான் பீ எஸ்ஸர்னல் குர்ஆன்

இது சிறு குழந்தைகள் அரபி ஓத சுலபமாய் கற்றுக் கொள்ள புதிய முறையில் எழுதியுள்ள அரபி காயிதா. இதில் ஒவ்வொரு பாடத்திற்கு முன்பும் அந்த பாடத்தை குழந்தைகளுக்கு எவ்வாறு கற்றுக் கொடுக்க வேண்டு மென்ற ஒஸ்தாத்மார்களுக்கு குறிப்பும் அறபுத் தமிழில் போடப்பட்டுள்ளது. இதை அழகாக பெரிய எழுத்தில் எழுதி போட்டோ பிளாக் செய்து கிளேஸ் காகிதத்தில் அச்சிடப் பட்டிருக்கிறது.

இரண்டு பாகங்கள் சேர்ந்தது. விலை நயா பைசா. 40

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,**
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# சிறைப் பறவை சிப்கத்துலா
### அல்லது
# துப்பு துலக்கிய தூயவர்.

## அத்தியாயம் 19

"துப்பறிபவர் என்ற முறையில் அவரைப் பற்றி நீ நினைப்பது என்ன?" இகழ்ச்சியோடு காதர்கான் வினவினன்.

அவள் பதில் பேச வில்லை. அந்த மனிதருடன் தொடர்பு கொள்ள நேர்ந்ததைத் தொடர்ந்து அவள் பீதியுற்றிருந்தாள். துப்பறியும் நிபுணர்களின் முன்னிலையில் நடுங்கிப் பயப்படுவது ஜினத் போன்ற பெண்களுக்கு இழுக்கு அல்லவா? அவர் அங்கு இருந்த வரை அவள் சமாளித்துக் கொண்டிருந்தாளாயினும் அவர் சென்று விட்டதும் உள்ளே மறைந்திருந்த பீதி வெளிக் கிளம்பிற்று.

"அவர் எத்தன்மை வாய்ந்தவர் என்பது எனக்குத் தெரியாது." அவள் மூச்சு விடாமல் பேசினள். "அவர் பழகிய பாம்பு—பல் பிடுங்கிய பாம்பு போல காணப்படுகிறார். அதை நீங்கள் உணர்கிறீர்களா?"

"நல்ல பாம்பு மில்லை, மண்ணுங்கட்டியுமில்லை" காதர்கான் உதட்டைக் கடித்துக் கொண்டே சொன்னன். தௌலத்கானை விட அவர் மிக மோசமானவர். அத்தகைய மனிதரைத்தான் பெரிய கம்பெனிகள் நாடித் தேடுகின்றன. உண்மையிலேயே தந்திர சாமர்த்திய மிக்க துப்பறிபவருக்கு அவை வாய்ப்பு அளிப்பதில்லை"

"தௌலத்கான் யார்?"

"அவரும் வயோதிகர் தான். அவரை வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள். அதற்கு நான் தான் காரண கர்த்தா. பிறகு முஹம்மது ராஜாக்கான் என்னும் இந்த மனிதரை அமர்த்தி யிருக்கிறார்கள். மூன்று வருடங்களாக துப்பு துலக்க முயன்றும் அவரால் எதுவும் கண்டு பிடிக்க முடிய வில்லை."

"உங்களை அபாயம், ஆபத்து சூழ்ந்திருக்க வில்லையா?"

"எப்போதுமே ஆபத்து இருந்து கொண்டிருக்க வில்லையா! வழக்கமானதை விட அதிக அபாயம் இருக்க வில்லை. என்னை அவர்கள் தொட முடியாது. ஆகவே, கவலைப் படாதே. தந்திர சாமர்த்தியமாக நான் வேலை செய்வதால் எனது போர்வையை நீக்கி எவராலும் எளிதில் என்னைக் கண்டு பிடித்து விட முடியாது. கள்ள நோட்டு தயாரானதும் எனது வேலை முடிந்து விடுகிறது; அதற்குப் பிறகு எந்த காரணத்தை முன்னிட்டும் என் மீது சந்தேகங்

கொள்ளவோ அல்லது என்னைக் கையுங்களவுமாகப் பிடிக்கவோ முடியாது.''

''கள்ள கோட்டு தயாரானதும் உங்களைப் பிடிக்க முடியாதா?'' அவள் அசந்து விட்டாள். ''அப்படியானால் நீங்கள் தான் கள்ள கோட்டு தயாரிப்பவரா?''

''வேறு எதாவது விஷயம் பற்றிப் பேசு'' அவன் பேச்சை வேறு திக்கில் திருப்புவதற்கு முயற்சித்தான்.

சிறிது நேரத்துக்குப் பிறகு கரீம் ஷரீப் வந்ததும், அவனை ஜீனத் வாசலில் சந்தித்து ராஜாக் கானின் திடீர் விஜயம் பற்றி எடுத்துரைத்தாள். காதர்கானைப் போல அவனும் அதே அபிப்பிராயங் கொண்டிருப்பதைக் கண்டு அவள் ஆச்சரிய முற்றாள்.

''அந்த ஆசாமி ஒரு முட்டாள். ஆனால் நேர்மையானவன்— ஐயாயிரம் ரூபாயைப் பார்க்கும் வரை. ஐயாயிரம் ரூபாய் என்றதும் வாயைப் பிளக்காதவர்கள் யாருளர்?''

''உங்கள் மகனைப் பார்ப்பதற்கு அவர் ஏன் வந்தார்?''

''தொழிலில் சம்பந்தப்பட்ட எவருக்கும் கள்ள கோட்டு தயாரிப்பவன் காதர் என்பது தெரியாதா என்ன? பல்லாண்டுகளாக அவன் மீது அக் குற்றம் சுமத்துவதற்கு அவர்கள் முயற்சித்து வரவில்லையா? அவர் வந்தது வாஸ்தவம் தான். அதுவே அவரது கடைசி முயற்சி. சரி, அதிருக்கட்டும் பையன் எப்படி யிருக்கிறான்?''

''அவர் சௌக்கியமாக இருக்கிறார். ஆனால் அடிக்கடி உணர்ச்சி வசப்படுகிறார்.''

''அவன் அடிக்கடி உணர்ச்சி வசப்படுவது இயற்கையே யாகும். ஒரே நாளில் அவன் குணமாகி விடுவான் என்று நினைக்கிறாயா? கிளப் மீண்டும் இயங்கி வருகிறது.''

''அது மூடப்பட்டிருந்ததா, என்ன?''

''அது மூடப்பட்டிருக்க வில்லை. ஆனால் பொது ஜன ஆதரவு சிறிது குறைந்திருந்தது.'' பல்லிளித்துக் கொண்டே அவன் சொன்னான். பின்னர், அவளது கரத்தைப் பற்றி யிழுத்துக் கொண்டு தோட்டத்துக்குச் சென்று, ''அந்த துப்பாக்கி சுடுதல் சம்பவத்தை நினையாதே, அதற்குப் பொறுப்பாளியாக இருந்தவனை நான் கவனித்துக் கொள்கிறேன்.''

''உங்களுக்குத் தெரியுமா?''

அந்த விஷயம் பற்றி அவன் அமைதியாக விவாதித்தது அதுவே முதல் தடவை. ஏனெனில் காதர்கானின் உயிருக்கு உலைவைப்பதற்

கான அந்த சம்பவம் பற்றிப் பிரஸ்தாபித்த போது அவன் அமைதியில்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான்.

"ஆம், எனக்குத் தெரியும்." திடசித்தத்தோடு அவன் சொன்னான். "அது கரீமுல்லாகான்—ஆனால் அதைப்பற்றி நீ எதுவும் சொல்லத் தேவையில்லை. அவனை நான் கவனித்துக் கொள்கிறேன்."

"ஆனால் உங்கள் மகன் நினைப்பது......"

"காதர்கான் என்ன நினைக்கிறான் என்பதைப் பற்றிக் கவலைப் படாதே, நான் சொல்கிறபடி நடந்து கொள்."

சூடான தேநீர் கொண்டு வருமாறு பணித்து அவளை அவன் உள்ளே அனுப்பினான்—அவன் பெரிய தேநீர்க் குடியன். அவள் உள்ளே சென்றிருந்த சமயத்தைப் பயன் படுத்திக் கொண்டு மகனிடம் இரகசியம் பேசலானான்.

"காதர், உனது நோட்டுகளுக்குப் பெரும் கிராக்கி, வேண்டுகோள் இருந்து கொண்டிருக்கிறது. ஹஸனல்லியிடமிருந்து எனக்குக் கடிதம் கிடைத்திருக்கிறது. வட இந்தியாவில் மற்றொருவன் போட்டியாகக் கிளம்பி யிருப்பதாக அவன் எழுதி யிருக்கிறான். எனினும், உனது நோட்டுகளையே விரும்புகிறார்களாம். வெகு சீக்கிரம் ஐம்பது லட்சம் பெறுமான நோட்டுகளை புழக்கத்துக்கு விட்டு விடுவதாகச் சொல்கிறார்கள். காதர், ஹஸனல்லி சொல்வது சரி, நீ அசௌக்கிய முற்றிருக்கும் பொழுது சப்ளை குறைந்து விடுமானால், துப்பறிவோர் உன் மீது பாய்ந்து விடுவது சுலபம்."

"அதைப்பற்றி நானும் சிந்தித்துப் பார்த்தேன். அடுத்த வாரம் அச்சுவேலை ஆரம்பித்துவிடும் என்று தொழில் சம்பந்தப் பட்ட ஒவ்வொருவருக்கும் நீங்கள் தெரிவித்து விடலாம்."

"ஜரூராக வேலையில் ஈடுபடுமளவுக்கு உனது உடல்நிலை தேறி விட்டதா?"

"ஆம்" என தலையசைத்து, நிமிர்ந்து உட்கார முயற்சித்தான். ஆனால் அவ்வாறு செய்யமுடியாமல் திணறினான்.

"ரஜாக்கான் இங்கு வந்திருந்தார்-உங்களிடம் அவள் சொன்னாளா?"

"ரஜாக்கானைப்பற்றி நான் கிஞ்சித்தும் கவலைப்படவில்லை. அவரைப்பற்றிப் பற்பல விதமான கதைகள் கட்டிவிடப் பட்டிருக்கின்றன. உண்மையைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக விருக்கிறது."

அவர்கள் இருவரும் சிரித்துக்கொண்டார்கள். தொழிலைக் கவனிப்பதற்கான வழி வகைகள்பற்றி அன்று முழுவதும் ஆலோசித்தார்கள்.

ஜினத்திடம் காதர்கான் கூறியது முற்றிலும் உண்மை. வாஸ்தவத்தில் அவனுக்கு எவ்வித பயமும் கிடையாது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பன்னிரண்டு பாங்க்குகளில் அவன் வெவ்வேறு பெயரில் பணம்போட்டு வைத்திருந்தான். பத்திரமானவொரு இடத்தில் அவசர நிலையைச் சமாளிப்பதற்காக ரொக்கப் பணம் தயாராக வைத்திருந்தான்.

"எப்போதாவது நீ தொழிலை நிறுத்தியாகவேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஆனால் அளவிடமுடியாத சம்பாத்யத்துக்குச் சமாப்தி செய்வதென்றால், மனம்வருமா?" கரீம் ஷரீப் பேசினன். கணக்கில்லாத காசுகளை கடத்திசெல்வதும் கஷ்டமான காரியமன்றோ? உன்னைப்போலவே பெரும் அளவில் கள்ள நோட்டுகளை அச்சிட்டு புழக்கத்துக்குக் கொண்டுவரவுமில்லை, அதற்காக நான் முயற்சிக்கவு மில்லை."

தந்தையின் புகழ்மொழியை தனயன் புளகாங்கிதத்துடன் கேட்டுக் கொண்டான்.

முழங்கால்களைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த கரீம் ஷரீப் மேலும் சொன்னன்:— "ஆனல் என்றாவதொருநாள் முடிவுகாண வேண்டும். அது நல்ல முடிவாக இருக்கவேண்டும். அதனை எவ்வாறு செய்து முடிப்பது என்பது தான் எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது."

"நீங்கள் பேசுவது எனக்குப் புரியவில்லையே."

"கரீமுல்லா கானைப் பற்றி நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். 'கண்ணிய மிகு கான்சாஹிப்' என அவன் அழைக்கப்படுகிறனல்லவா? ஆனல் இப்போது அவனது அருமை மகளின் கண்களுக்கு கண்ணிய மிகுந்தவன் என்று தோன்றமாட்டான். எனினும் துப்பறியும் உத்தியோகஸ்தர்களையும் விருந்துக் கழைத்து சரிசமமாகப் பழகுமளவுக்குக் கண்ணியமும் கௌரவமும் பெற்றிருக்கிறன். அக்கயவன் சிப்கத்துல்லாவும் அவர்களிலொருவன். அவன் அந்தப் பெண்ணை மணந்துகொள்வான்."

காதர்கான் கண்சிமிட்டினன்.

"என்னைப் பொறுத்தவரை, அவள் ஷைத்தானைக் கலியாணம் செய்து கொள்ளட்டும்."

"ஆனல் உன்னிடமிருந்து விவாக விலக்குப் பெருமல் அவளால் விவாகம் செய்துகொள்ள முடியாது என்பதை மறந்து விடாதே. சட்டம் அப்படிச் சொல்கிறது. அதனை நீ உணர்ந்து கொண்டிருக்கிறயா? நீ இருதாரங்களைக் கொண்டிருக்கிறய் என்பதை நிரூபிக்காமல் அவளால் விவாக விலக்கு பெறமுடியாது. சிப்கத்

துல்லா குணமாகும்வரை அவள் தாமதித்திருப்பாளா அல்லது இப்போதே நடவடிக்கை மேற்கொள்வாளா என்பதுதான் பிரச்னை. எனக்கு அவகாசம் அளித்தாளானல் உனது மனத்துக் கிசைந்த பெண்ணை நீ அடையலாம்; கரீமுல்லா என்வசம் சிக்கி விடுவான். சட்டப்படி அவள் உனது மனைவியல்லவா?''

அவன் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் அர்த்த புஷ்டி நிறைந்ததாகக் காணப்பட்டது. தந்தையை ஏறிட்டுப் பார்த்தான் தனயன்.

"நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே''

"கரீமுல்லாவே கள்ளநோட்டு தயாரிப்பவனுகி விட்டானென்று வைத்துக்கொள்'' கரீம் ஷரீப் மிக மெதுவான குரலில் கூறினன்: "கள்ளநோட்டு அச்சிடுவதற்கான உபகரணங்களோடு அவன் பிடிபட்டான் என்று வைத்துக்கொள். அவ்வாறு செய்யமுடியும். அவனது வீட்டில் அந்த இயந்திர தளவாடங்களைக் கொண்டுபோய் வைத்து விடலாம் என்று சொல்லவில்லை— அவ்வித சாக்ஷியத்தை எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனல் ஸ்தலத்துக்கு அவனை வரச்செய்து காட்டிக் கொடுத்து விடலாமல்லவா? அப்போது துப்பறியும் இலாகாவிலுள்ள அவனது சிறந்த நண்பனுல்கூட அவனைக் காப்பாற்ற முடியாதன்ருே? இந்த எண்ணம் உனக்கு எப்படித் தோன்றுகிறது.?''

"அவ்வாறு செய்யமுடியாது.''

"ஆ! முடியாதா? நீ எண்ணித் துணிந்து விட்டால் செய்து முடிக்க முடியாத காரியமு முண்டோ?''

"ஆனல் அவ்வாறு செய்வதால் நான் அந்தப் பெண்ணை அடைய முடியாது.''

தனயனை நோக்கி கரீம் சொன்னன், "கள்ள நோட்டு அச்சிடுபவனைப் பிடித்து விட்டால், கள்ள நோட்டு அச்சடிக்கப்படுதலையும் அவர்கள் கண்டு பிடிக்கவேண்டுமல்லவா? ஆகவே, நாம் தப்பித்துக் கொள்ள வேண்டும்— உயிருடன் தப்பித்துக்கொள்ள வேண்டும். சில மணிநேரம் அவகாசமே நமக்குக் கிடைக்கலாம் ஆகாய விமானங்களும் ஹெலிகாப்டர்களும் இருக்கும் இக்காலத்தில் மூன்று மணி நேரத்தில் நானூறு மைல் அப்பால் சென்று விடலாமல்லவா? இந்தத் தொழிலில் நான் சம்பந்தப்பட்டிருக்கிறேனென அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிருர்கள். ஆகவே, நான் தப்பிப் பிழைப்பது துர்லபம். ஆகவே அந்தப் பெண்ணுடன் நீ தப்பியோடி விடலாம்.''

"பலாத்காரமாக அவளைத் தூக்கிச்சென்று விடுவதா?'' அவன் ஆச்சரியத்தோடு வினவினன். அந்த எண்ணம் அவனுக்கு உதிக்கவே யில்லை.

தந்தை தலையசைத்தான்.

"நீ உயிர் தப்பிப் பிழைக்க வேண்டுமானால் அந்த ஒருவழிதான் இருக்கிறது. அவளை இழுத்துக்கொண்டு செல்வதும் குற்றமல்ல. சட்டப்படி அவள் உன்மனைவி என்பதை மறந்து விடாதே" சுற்று முற்றும் திரும்பிப் பார்த்து எவரும் ஒற்றுக் கேட்கவில்லை என்பதை நிச்சயித்துக்கொண்டு அவன் சொன்னான் "கரீமுல்லாவையும் அவனது மகளையும் சிப்கத்துல்லாவையும் நாம் விருந்துக்கழைத்தாலென்ன?"

"எங்கே?"

"எட்டாம் எண்ணுள்ள அறையில் சிறு விருந்து நடத்தலாம், நீ நினைப்பதென்ன? இரண்டு சொட்டு தூக்க மருந்தை விருந்துணவில் கலந்து விடலாமல்லவா?"

"உங்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது" தனயன் கோபத்தோடு பேசினான். "அக்காரியம் செய்வதால் பயனென்ன? பெண்ணையும் அழைத்துக்கொண்டு அவன் வருவானென்று நினைக்கிறீர்களா?"

"என்னை நம்பு அப்பா" (தொடரும்)


புதிய இரண்டாம் பதிப்பு

# நபி நாயகத்தின் ஜீவிய சரித்திரம்

(சிறுவசனம்.)

இச்சரிதை நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவதரித்தது முதல் வபாத்து வரையில் நிகழ்ந்துள்ள விஷயங்கள் யாவும் ஒன்று சேர்த்து அச்சிடப்பட்டது. இது டிம்மி 1-8 பேஜ் ஸைஸில் 1008-பக்கங்களில் பதிப்பித்து இங்கிலீஸ் கலிகோ பைண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 8

அறபுத் தமிழ் அஷ்ஷஜாதுல் முஹம்மதியா (றஸூலுல்லாவின் சரிதை) விலை ரூ. 8

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.



Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# கீமியாயே ஸஆதத்து

தமிழ் மொழிப்புரை

1-வது, 2-வது, 3-வது, 4-வது ஆக 4-வால்யங்கள்.

இந்த கிதாபில் உள்ள சில விஷயங்களாவன:—

1-வது, தன்னையும் தனக்கு ஆதாரமான தலைவனையும் அறியாமல் பின்னையொன்றை தானென்றும் தலைவனென்றும் கருதுகிற பேர்களுக்கு இக்கிதாபு உணர்வை வரவைக்கும்.

2-வது, அகாத்ார பதர் மொழிகளால் நிறைந்த சில அஞ்ஞான புத்தகங்களை மெஞ்ஞான பொக்கிஷங்களென மதித்து மருண்டு கிடக்கின்ற மதியீனர்களின் மனதைத் திருப்பும்.

3-வது, இகபரங்கள் இன்ன தென்றறியாமல் இலோக இச்சைகளிலேயே மூழ்கி இரவும் பகலும் இதற்கே தொண்டு செய்து பரலோக வாழ்க்கையைப் பற்றி சிந்திக்காதிருக்கிற பேதை மாந்தர்களுக்கு இகபர விருப்பத்தை யூட்டும்.

4-வது, இபாதத்து செய்கிறவர்களுக்கு சுன்னத்து ஜமாஅத்துகளின் இஃதிகாது, இல்மை தேடல், ஒலுவு, முழுக்கு, தயம்மம் முதலிய சுத்தி வகைகள், தொழுகை நோன்பு, ஸக்காத்து, ஹஜ்ஜு, குர்ஆன் ஓதல், திக்று அவ்றாது இவைகளின் அஹ்காம்களும் அஸ்றாறுகளும் சொல்லப்பட்டிருப்பதால், இது அமல் செய்கிறவர்களுக்கு மிகவும் பிரயோஜனத்தைக் கொடுக்கும். இதன் அருமை, கிதாபை பார்த்தால் தான் அறியலாம்.

இதன் 1-வது வால்யத்தில் இபாதத்துகளுடைய பயான் அடங்கி யிருக்கின்றது.

1-வது வால்யம் புதிய அச்சு கலிகோ பைண்டு

விலை ரூ. 3—0—0

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

**ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,**

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# பத்ஹுர் ரஹ்மான்
# பில்பிக்ஹின் னு:.மான்

(ஹனபி மதுஹபுக்குரியது)

பிரயோஜனமான கல்வி, பிரயோஜனமில்லாத கல்வி என்று இரண்டு வகை யுண்டு. உலக வாழ்வை மட்டும் நமக்கு எடுத்துச் சொல்வது பிரயோஜன மில்லாத கல்வி. நம் மனமும் ஒழுக்கமும் சீர் பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தரக்கூடியதே பிரயோஜனமான கல்வியாகும்.

தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான ஒழுக்க முறைகள் என்னும் பிக்ஹு மஸ்அலாக்களையும் கற்றறிந்து அமல் செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கடமையாகும். இது தான் இம்மை, மறுமை இரு லோகத்திலும் பிரயோஜனம் தரவல்லது.

இந்த நூலில் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒழுக வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. உதாரணமாக ஈமான், இஸ்லாம், கலிமா பரிசுத்தம், தொழுகை ஜும்ஆ மகிமை, ஜியாரத்துல் குபூர், ஜக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கமும், ஸுன்னத்தின் சிறப்பு, ஸபருடைய ஒழுக்கம், இபாதத்தின் மகிமை மற்றும் சகலவிதமான போதனைகளும் அடங்கி யிருக்கின்றன.

நல்ல சுத்த தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல்—புதிய பதிப்பு. ஆங்கு அரபு மொழியில் ஓத வேண்டிய கலிமா, துஆ முதலானவைகள் அரபியிலேயும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருமை நேரில் பார்த்தால் தான் தெரியும். இதன் விலை ரூ. 3

ஷை அறபுத் தமிழ் அல்பத்ஹுர் றப்பானி-பி-பிக்ஹே நிஃமானி. விலை ரூ. 5

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

**ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,**

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ்–5.